ஈழநாடு
Eelanadu






வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 28.03.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 118 | பக்கங்கள் : 16


**08**
சிக்கிய ரூ. 265 கோடி சிக்காமல் தப்பியது யார்?


**09**
ஜெனிவாவில் வெற்றி பெற்றது யார்?


**11**
அரசிடம் மிகமோசமான வெளிநாட்டுக்கொள்கை


**14**
சர்வதேசம் தலையிடக் கூடாது என்று இலங்கை ஒருபோதும் கூறமுடியாது

### இலங்கையின் இறையாண்மையை பாதுகாத்து

# ஐ.நா. தீர்மானத்தை அச்சமின்றி எதிர்கொள்ள அரசாங்கம் தயார்

## ஜனாதிபதி திட்டவட்டம் இந்தியா மீதும் மறைமுகமாக சாடல்



மாத்தறை, மார்ச்.28

இலங்கையின் இறையாண்மையை பாதுகாத்துக் கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (ஜெனிவா) தீர்மானங்களுக்கு அச்சமின்றி முகங்கொடுக்க அரசாங்கம் தயாராகவுள்ளது என ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 15

## ஒரே நாளில் 14 ஆயிரத்து 455 பேருக்கு தடுப்பூசி

கொழும்பு, மார்ச் 28

இலங்கையில் ஒரே நாளில் நேற்று முன் தினம் (மார்ச்-26) 14 ஆயிரத்து 455 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளன.

கொவிட்-19 தடுப்பூசி செலுத்தல் தொடர்பான சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் நாளாந்த அறிக்கை 15

# மிகமோசமடைகின்றது யாழ்ப்பாண நிலைமை!

### யாழ்ப்பாணத்தில் நேற்று 143 பேருக்கு கொரோனா 127 பேர் திருநெல்வேலி சந்தையில் அடையாளம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்று நிலைமை மிகமோசமடைந்துள்ளது. நாளுக்கு நாள் தொற்றாளர் எண்ணிக்கை அச்சமடையக்கூடியவகையில் அதிகரித்து வருவதாக சுகாதார தரப்பு வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. 15

## நேற்று மட்டும் 260 பேருக்கு கொரோனா

கொழும்பு,மார்ச்.28

நாட்டில் நேற்று மட்டும் 260 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன்படி, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 91 ஆயிரத்து 821 ஆக அதிகரித்துள்ளது. (அ-எ)

## ஈழ அகதிகளை அனுப்புவதை சுவிஸ் ஒருபோதும் நிறுத்தாது

### ஆனால் தாமதமாகலாம்

பேர்ண், மார்ச் 28

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேறி இருக்கின்றபின்னணியில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பான கொள்கைகளில் மாற்றங்கள் வருமா?

இவ்வாறான கேள்விகளை அகதிகள் நல அமைப்புகள் எழுப்புகின்றன.

சுவிஸ் நாட்டைப் பொறுத்த வரை தஞ்சம் மறுக்கப்பட்ட தமிழர்களைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்புவது நிறுத்தப்படமாட்டாது எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவதில்லை என்று பொதுவான முடிவு எதுவும் 15

## திருநெல்வேலியில் கடைகளும் பூட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 28

திருநெல்வேலியில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிக அளவில் அடையாளம் காணப்பட்டுவரும் நிலையில் சந்தைத் தொகுதியில் உள்ள விற்பனை நிலையங்கள் மற்றும் அதற்கு அண்மை 15

## ஏ-9 வீதியில் விபத்து இரு பெண்கள் பலி!



### 15 பேர் காயம்!!

கொழும்பு, மார்ச் 28

யாழ் - கண்டி ஏ-9 வீதியின் அனுராதபுரம், திறப்பனை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர். 15

## “தமிழரை நாடு கடத்த வேண்டாம்” ஜேர்மனிக்கு கஜேந்திரகுமார் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்களை இலங்கைக்கு நாடு கடத்தும் திட்டத்தை ஜேர்மன் அரசாங்கம் உடனடியாக கைவிடவேண்டும் என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஜேர்மன் அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

”மார்ச் 30 ம் திகதி புகலிடக்கோரிக்கையாளர்களான பெருமளவு இலங்கை தமிழர்களை இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு ஜேர்மன் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அறிந்து நாங்கள் பெரும் மனக்கலக்கம் அடைந்துள்ளோம்.

ஜேர்மனியில் உள்ள தமிழ் சமூகத்திற்கு இது ஏற்படுத்தக்கூடிய வேதனை அச்சங் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகமோசமடை...

நேற்று மட்டும் யாழ். மாவட்டத்தில் 143 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் திருநெல்வேலிப் பொதுச் சந்தை தொகுதி வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் 127 பேர் அடங்குகின்றனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரே நாளில் கண்டறியப்பட்ட கொவிட்-19 நோய்த் தொற்றாளர்களின் அதிகூடிய எண்ணிக்கை இதுவாகும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆய்வுகூடங்களில் 746 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

143 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவ பீட மாணவர்கள் மூவர், தாதிய மாணவர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட 7 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பொதுச் சந்தை தொகுதியில் உள்ள மரக்கறி வியாபாரிகள், கடைகளின் வியாபாரிகள் மற்றும் தொழிலாளிகள் என 127 பேருக்கு தொற்று உள்ளமை நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரில் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என சுயதனிமைப்படுத்தப்பட்டிருத்த நால்வருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## ஐ.நா. தீர்மான...

ஜனாதிபதி பங்கேற்கும் கிராமத்துடன் கலந்துரையாடலின் 16ஆவது நிகழ்ச்சித் திட்டம் மாத்தறை மாவட்டத்தின் பிட்டபத்த பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிரிவெல்கெல வடக்கு மூன்றாம் பியவர கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்று இடம்பெற்றது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் ஒவ்வொரு பக்கத்திலும், தேசிய பாதுகாப்பு குறித்து கடந்த அரசாங்கம் அக்கறை காட்டாததால் தான் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் இராணுவ வீரர்கள் சிறையில் அடைக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டன. அந்த வழக்குகளிலிருந்து அவர்களை வெளியேற்றுவதில் இப்போது எனக்கு ஒரு பெரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. சர்வதேசத்துக்கு சென்று ஜெனிவாவில் தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்கி எமது நாட்டின் இறையாண்மையை எமது சுதந்திரத்தை முழுமையாக அழித்து விட்டனர்.

அந்த இணை அனுசரணையில் இருந்து நாம் விலகியுள்ளோம். அவர்கள் எங்களுக்கு எதிராகச் செயல்படுகிறார்கள். அது ஒரு பொருட்டல்ல. நாம் அதை எதிர்கொள்ள முடியும். நாங்கள் ஒரு சுதந்திர நாடு. நாம் எங்கள் வேலையைச் செய்யலாம். நாம் அவர்களை அச்சமின்றி எதிர்கொள்கின்றோம். அதுதான் தேவை. இந்தியப் பெருங்கடலில் இருக்கும் சக்திகளின் விடயங்களில் நாம் தலையிடத் தேவையில்லை. அதிகாரப் பகிர்வு என்ற பெயரில் பிரிவினைவாதத்தை மீண்டும் கொண்டுவருவதற்கும், அவர்களின் புவிசார் அரசியல் நலன்களை நிறைவேற்ற நமது இறையாண்மையைக் காட்டிக் கொடுப்பதற்கும் நாங்கள் தயாராக இல்லை- என்றார். (அ-எ)

## ஒரே நாளில்...

யில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை 8 இலட்சத்து 84 ஆயிரத்து 164 பேருக்கு கொவிட்-19 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈழ அகதிகளை...

எடுக்கப்படவில்லை. அந்நடவடிக்கை தொடரும். தொற்று நோய் காரணமாக அது தாமதமாகலாம் - என்று சுவிஸ் நாட்டின் குடியேற்றவாசிகளுக்கான செயலகம் தெரிவித்துள்ளது.

"தற்போதைய நிலைமையின் அடிப்படையில் இலங்கையில் பொதுவான ஆபத்து இருப்பதாகக் கருதுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. அங்கு முழு இனக் குழுமங்களும் அபாயத்தில் இல்லை."

"எனவே சுவிஸில் ஒழுங்கான வதிவிட அனுமதி இன்றித் தங்கி இருக்கின்ற இலங்கைப் பிரஜைகளைத் திருப்பி அனுப்புகின்ற நடைமுறைகளில் மாற்றம் இருக்காது."

" ஒவ்வொருவருடைய புகலிட விண்ணப் பங்களும் தனித்தனியே கவனமாக ஆராயப்பட்டு வருகின்றன. கொரோனா வைரஸ்தொற்று நோய் காரணமாக

அவர்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் தாமதமாகலாம். ஆனால் பொது வான ஒரு முடிவாக அது நிறுத்தப்படமாட்டாது."

-இவ்வாறு சுவிஸ் கூட்டாட்சி அரசின் குடியேற்றவாசிகளுக்கான செயலகம் (State Secretariat for Migration - SEM) தெரிவித்துள்ளது.

ஜேர்மனியில் புகலிடம் மறுக்கப்பட்ட தமிழர்களைக் கைது செய்து நாட்டுக்குத் திருப்பி அனுப்புகின்ற முஸ்தீபுகள் இடம் பெற்று வருவதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகி வருவது தெரிந்ததே.

## தமிழரை...

களிற்கு அப்பால் இலங்கையில் இடம்பெற்ற இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற மனித உரிமை மீறல்களிற்கு தீர்வை காண்பதற்கான சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் மீதும் இது கடும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஜேர்மனி ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக தெரிவிக்கும் தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய ஒருவார காலத்திற்குள் அந்த அரசாங்கத்திடமிருந்தே புகலிடம் கோரும் புகலிடக்கோரிக்கையாளர்களை அந்த அரசாங்கத்தின் கரங்களில் ஒப்படைப்பதற்கு ஜேர்மனி முயல்வது முற்றிலும் எதிர்மாறான செய்தியை தெரிவிப்பதாக அமையும்.

இதன் காரணமாக புகலிடக்கோரிக்கையாளர்களின் உயிர்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இந்த தவறான முடிவை உடனடியாக மீள் பரிசீலனை செய்யுமாறும் அவர் ஜேர்மன் அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டிருக்கின்றார்.

## திருநெல்வேலி..

யில் உள்ள விற்பனை நிலையங்கள் அனைத்தும் மூடப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றும் 127 பேர் குறித்த பகுதிகளில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையிலேயே இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,

இன்று மாவட்ட செயலகத்தில் காலை யாழ்.மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணி சந்தித்து யாழ்ப்பாணத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கும் என்றும் கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.





# நல்லூரில் கழிவு ஒயில் விசமிகள் செயலில்லை

## ஆலய நிர்வாகம் விளக்கமளிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.28

நல்லூர் கந்தசுவாமி கோவில் சூழலில் கலாசாரத்தைப் பேணும் வகையிலேயே கழிவு ஒயில் ஊற்றப்பட்டது என்று நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது விசமிகள் செயல் என வெளியாகிய செய்தியை மறுக்கும் நல்லூர் கந்தசுவாமி கோவில் தரப்பு, இளையோர் இணை தேர் முட்டிப்பகுதியில் வந்து அமர்வதைத் தடுக்கும் வகையில் இவ்வாறு செய்யப்பட்டது என்று விளக்கமளித்துள்ளது.

நல்லூர் ஆலயச் சூழலில் கலாசாரத்தைப் பேணும் வகையில் இளையோர் இணை அமர்வதைத் தடுக்க பல்வேறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் தடுக்க முடியாத நிலையில் கழிவு ஒயில் ஊற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (எ)

# சஹ்ரானின் மத்ரசாவில் பணிபுரிந்த இருவர் கைது

கொழும்பு, மார்ச் 28

உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை தாக்குதல் சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான சஹ்ரான் ஹாசீமினால் நடத்தப்பட்டதாக கூறப்படும் மத்ரசா பள்ளியில் பணிபுரிந்த இளைஞர்கள் இருவரை குற் றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய் துள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச் சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

சந்தேக நபர்களிருவரையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்துவதற்கு குற்றப்புலனாய்வு பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

புத்தளம் பகுதியில் இயங்கிவரும் மத்ரசா பள்ளி ஒன்றில் பணிபுரிந்து வந்த இளைஞர்கள் இருவரை குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர். சந்தேக நபர்களை கைது செய்யுமாறு , சட்டமா அதிபரினால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கமையவே அவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சிலாபம் மற்றும் மதுரங்குளி பகுதியைச் சேர்ந்த 26,27 ஆகிய வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களால் செயற்படுத்தப்பட்டு வரும் , மேற்படி மத்ரசா பள்ளியில் சஹ்ரான் ஹாசீம் வகுப்புகளை நடத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது-என்றார்.

## ஏ-9 வீதியில்...

பக்கமூன பகுதியிலிருந்து அநுராதபுரத்துக்கு யாத்திரை சென்ற வான் ஒன்று வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 15 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# யானை தாக்கி இருவர் மரணம்

பொலநறுவை, மார்ச்.28

பொலநறுவை அத்தனகடவல பிரதேசத்தில் நேற்றுக் காலை காட்டு யானை தாக்குதலுக்குள்ளாகி மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்தார்.

பண்ணையிலிருந்து தனது வீடு நோக்கி வந்து கொண்டிருந்தபோது காட்டு யானை குறித்த நபரை தாக்கியது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, குறித்த நபரை சுமார் 50 மீற்றர் தூரத்துக் காட்டு யானை இழுத்துச் சென்றுள்ளது என கிராமவாசிகள் தெரிவித்தனர்.

குறித்த கிராமத்தை சுற்றி மின்வேலி அமைக்கப்பட்டுள்ளபோதும் அதில் மின்சாரம் இல்லாத காரணத்தால் காட்டு யானைகள் இவ்வாறு கிராமத்துக்குள் நுழைவதாக கிராமவாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். இதேவேளை, நேற்று முன்தினம் அம் பாறை கொடவெஹெர பிரதேசத்தில் காட்டு யானை தாக்குதலுக்குள்ளான 28 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

நகைச்சுவையாக ஒரு கதை ஒன்று சொல்லப்படுவதுண்டு.

ஒருவர் பெரிய மலை ஒன்றை சிறிய கயிறு ஒன்றினால் கட்டி மலையை இழுக்க முயன்று கொண்டிருந்தாராம்.

அவரை மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று நினைத்துக்கொண்டு அவ்வழியே போனவர்கள் கடந்து சென்றுகொண்டிருந்தனர்.

ஒரு பண்டிதர் மட்டும், அவரை அணுகி 'ஏன் தம்பி இப்பிடி அந்தப் பெரிய மலையை இந்தக் கயிற்றால் கட்டி இழுக்கமுடியுமா?' என்று கேட்டிருக்கிறார்.

அதற்கு அவர் சொன்ன பதில், 'வந்தா மலை... போனால் இந்த சின்னக்கயிறு தானே...' என்று.

இன்றுள்ள அரசியல்வாதிகளில் மாவை சேனாதிராஜா மிகப் பழையவர்.

தன்னுடைய பத்தொன்பதாவது வயதில் சத்தியாக்கிரகப் போராட்டத்துடன் ஆரம்பமானது அவரது அரசியல் வாழ்க்கை.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் தனது இருபதாவது வயதில் இணைந்தார். பின்னர் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலாளராகப் பணியாற்றினார். அறுபத்தி ஒன்பதில் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு எட்டு வெவ்வேறு சிறைச்சாலைகளில் மொத்தம் ஏழாண்டுகள் சிறையில் கழித்தார். பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

எண்பத்தி ஒன்பதில் இருந்து பாராளுமன்ற உறுப்பினராக நீண்டகாலம் பணியாற்றியவர்.

எழுபத்தி ஐந்தாம் ஆண்டு தந்தை செல்வா பதவியைத் துறந்து இடைத்தேர்தலைச் சந்திப்பதற்கு காரணமானவர் இந்த மாவை. அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவி துறைக்க வேண்டும் என்று கட்சிக்குள் இளைஞர்கள் விருப்பம் தெரிவித்தபோது, தந்தை செல்வா மாத்திரம் பதவியைத் துறந்து இடைத்தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்ற மாவையின் கோரிக்கையே கட்சிக்குள் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அப்போது அவர் முப்பத்தியிரண்டு வயது வாலிபர்.

அவர் எப்போதுமே தன்னை ஒரு வழமையான அரசியல்வாதியாக நினைத்ததில்லை. எப்போதும், தன்னை ஒரு அரசியல் தொண்டனாகவே கருதிவருபவர். அதனால்தான் தன்னோடு எப்போதும் தொண்டர்களை வைத்திருந்ததில்லை.

நமது அரசியல்வாதிகள் எல்லோருமே எப்போதும் தம்மோடு தொண்டர் 'அடிபொடி' களை வைத்திருப்பார்கள். அவர்கள் எங்கு போனாலும் அந்தத் தொண்டர் அடிபொடிகளும் கூடவே போவார்கள்.

கடந்த தேர்தலில் இப்படியான அடிபொடிகள், தத்தமது தலைவர்கள் பிரச்சாரங்களுக்கு கூட்டங்களுக்கு வரும்போது வெடிகொழுத்தவும் மாலை போடவும் அவர்களைத் தயார் செய்து வைத்திருப்பார்கள்.

கடந்த தேர்தலில் மாவை ஒரு கூட்டத்திற்கு போகும்போது அமைதியாக இருந்த கூட்ட மேடைகள், சுமந்திரன் வரும்போது மட்டும் வெடிகளாலும் மாலைகளாலும் அதிர்ந்தன. ஒரு கட்சியின் மூத்த தலைவர், பல தியாகங்களைக் கடந்து வந்த ஒரு தலைவருக்கு கிடைக்கவேண்டிய எந்த மரியாதையும் அவருக்கு கிடைக்கவில்லை.

அதற்கு அவர் தனக்கென தொண்டர்களை சேர்த்து வைத்திருக்காததே காரணம் என்பதல்ல. அவர் தன்னையும் தொண்டனாகவே நினைத்திருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அண்மையில் நடைபெற்ற பொத்துவில் முதல் பொலிகண்டிவரையான பேரணியில் கலந்து கொள்ள அரசியல் தலைவர்கள் அனைவரும் வந்திருந்தனர். பேரணியுடன் ஒவ்வொரு தலைவர்களின் வாகனங்களும் அணிவகுத்தச் சென்றன, எல்லாத் தலைவர்களின் வாகனங்களும் தலைவர்களுடன் அவர்களின் தொண்டர்களால் நிரம்பியிருந்தன.

ஆனால் மாவை மட்டும் தனது வாகனத்தில் தனி ஆளாக சென்றுகொண்டிருந்தது ஊர்க்குருவியின் கண்ணுக்கு உறுத்தியது.

நேற்று அரசியலுக்கு வந்த ஒருவர், அவர் அரசியலுக்கு வந்ததே ஒரு விபத்து.

அவர் சொல்கிறார், மாவையை சுமந்திரனும் சாணக்கியனும் ஓரம்கட்டுகிறார்களாம்.

இதைப்படித்தபோதே மாவையைப் பற்றிய நினைவுகள் இந்த ஊர்க்குருவிக்கு வந்துபோயின.

மாவை ஒரு பெரிய யானை. அதனை சிறிய கயிற்றினால் கட்டி வைத்திருக்கிறார்கள். பாவம் அவர் அந்தக் கயிற்றைக்கூட அறுத்துக்கொண்டு போகாமல் இருக்கிறார்!

மலையைக் கட்டி கயிற்றால் இழுக்கலாம் என்ற அந்தக் கதையைப்போல.. மாவை அறுத்துக் கொண்டு போனால் கயிறுதானே சேதம் என்று கட்டியவர்கள் நினைத்திருக்கலாம். அவர்கள் சிலவேளை தற்காலிகமாக வென்றிருக்கலாம். மாவை கயிற்றை கழட்டிக்கொண்டு வருவார் என்று நம்புவோம்!

அவர் ஓரம்கட்டப்படுகிறார் என்ற சிறிதரனின் ஓலத்தைப் பற்றி நாளை பார்ப்போம்.

- ஊர்க்குருவி.

# சு.க. தனித்து போட்டியிட்டால் பெரமுனவுக்கு பாதிப்பில்லை!

## திலும் அமுனுகம திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 28

மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஒன்றிணைத்து கூட்டணியாகப் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம். இருப்பினும், சுதந்திரக் கட்சியினர் தனித்துப் போட்டியிடுவதாகக் குறிப்பிட்டுக் கொள்கின்றனர். இவர்கள் தனித்துச் செல்வதால் பொதுஜன பெரமுனவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. பலமான கட்சிகள் பல கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன எனப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

நாவல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# தாதியர் இருவருக்கு கொரோனா தொற்று

வவுனியா, மார்ச் 28

வவுனியா வைத்தியசாலையில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்கள் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

வவுனியா வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் பணிபுரியும் தாதி ஒருவருக்கு அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

பின்னர் அவருடன் நெருங்கிப் பழகிய மற்றொரு தாதிக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், இருவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுப்பதற்கான மாதிரிகள் பெறப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த தாதியர்களுடன் தொடர்புகளைப் பேணிய சிலர் தனிமைப்படுத்தப்பட்டதுடன், இருவரையும் கிளிநொச்சி மற்றும் கொழும்பில் அமைந்துள்ள கொரோனா வைத்தியசாலைக்கு மாற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ)

# வெல்லாவெளியில் வெடிபொருள்கள் அதிரடிப்படையினரால் ஒருவர் கைது



மட்டக்களப்பு, மார்ச் 28

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் கல் உடைப்பதற்கான கல்குவாரி அனுமதிப்பத்திரம் காலாவதியான நிலையில் அதற்குப் பயன்படுத்தும் வெடிபொருட்களை வைத்திருந்த ஒருவரை நேற்றுச் சனிக்கிழமை விஷேட அதிரடிப்படையினர் கைது செய்ததுடன் வெடிபொருள்களை மீட்டு தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி விஷேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து நேற்றுக்காலை வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள விவேகானந்தபுரம் பிரதேசத்தில் கல்குவாரியில் விஷேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து சோதனையிட்டனர்.

இதன்போது கல் உடைப்பதற்காகப் பயன்படுத்திய வெடிபொருள்கள், அனுமதிப்பத்திரம் காலாவதியான நிலையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்ததுடன் அங்கிருந்த 166 டைனமற்குச்சிகள், 10 யார் கொண்ட சேவா நூல், 20 டெக்கினேற்றுக்களை மீட்டு வெல்லாவெளி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# போதைப்பொருள் குறித்து தகவல் வழங்குவோருக்கு பெறுமதிமிக்க சன்மானம்




கொழும்பு, மார்ச் 28

போதைப்பொருள் தொடர்பில் தகவல் வழங்குபவர்களுக்கு பெறுமதி மிக்க சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிப்பதற்காக பொலிஸார் தொடர்ந்தும் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு, திட்டமிட்ட குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினரும் இதுதொடர்பான சுற்றிவளைப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைய நேற்று முன்தினம் மாத்திரம் நூற்றுக்கும் மேற்பட்ட சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், நூற்றுக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் பாவனையால் இளைஞர்கள் பெரிதும் பாதிப்படைந்து வரும் நிலையில், அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்திலேயே இத்தகைய சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

போதைப் பொருள் கடத்தல்கள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்தே அதிகளவான தகவல்கள் பொலிஸாருக்குக் கிடைக்கின்றன.

இந்நிலையில், இவ்வாறு தகவல்களை வழங்கும் நபர்களுக்காக பெறுமதிமிக்க பரிசில்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, போதைப்பொருள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றால் அதனை 119, 118 மற்றும் 1997 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பு ஏற்படுத்தித் தெரிவிக்க முடியும்.

இவ்வாறு வழங்கப்படும் தகவல்களில், முக்கியமான மற்றும் பாரிய சுற்றிவளைப்புக்களை முன்னெடுப்பதற்கான தகவல்களை வழங்கும் நபர்களுக்கு, அவர்களது சேவையைப் பாராட்டும் வகையிலும், மேலும் அவர்கள் இத்தகைய தகவல்களை வழங்குவதற்காக ஊக்குவிக்கும் வகையிலும் பெறுமதிமிக்க பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

## வயலுக்குச் சென்றவர் திடீர் மரணம்!

திருகோணமலை, மார்ச் 28

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வயலுக்குச் சென்ற ஒருவர் திடீரென மரணமடைந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றது என பொலிஸார் தெரிவித்தனர். பேராறு, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 49 வயது சேகு இஸ்மாயில் பைசர் என்பவரே இவ்வாறு வயலுக்குச் சென்ற நிலையில் மரணமடைந்தார் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)




**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.03.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, பங்குனி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370**

# சஜித்தின் யோசனை

சஜித் பிரேமதாச எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரக்கூடிய ஆற்றலுள்ள சிங்கள தலைவர்களில் ஒருவர். எதிரணியை பொறுத்தவரையில் சஜித் பிரேமதாசவை தவிர்த்து ஒருவரை சுட்டிக்காட்டுவது கடினம். இலங்கைத் தீவை பொறுத்தவரையில் எவர் ஆட்சிக்கு வரவேண்டுமென்றாலும், அவர் சிங்கள பெரும்பான்மையினர் மத்தியில் நன்மதிப்பை பெறவேண்டும். நன்மதிப்பை பெறவேண்டுமாயின், சிங்கள பெரும்பான்மையை சில விடயங்களில் திருப்திப்படுத்தவேண்டும். சஜித் பிரேமதாச, இப்போதே அந்தப் பணியை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார். இலங்கையின்மீதான ஜெனிவா தீர்மானங்களை எதிர்காலத்தில் தாம் தோற்கடிப்போமென்று சஜித் கூறியிருப்பதை இந்த பின்புலத்தில்தான் புரிந்துகொள்ளவேண்டும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் மட்டும்தான் சஜித் பிரேமதாச வெற்றிபெற்றிருந்தார். ஏனைய அனைத்து மாகாணங்களிலும் கோட்டாபய ராஜபக்‌ஷவே வெற்றிபெற்றிருந்தார். வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கோட்டாபய ராஜபக்‌ஷவை ஆதரித்திருக்கவில்லை. அவர்கள் சஜித் பிரேமதாச ஜனாதிபதியாக வரவேண்டுமென்றே விரும்பியிருந்தனர். இதனை கோட்டபாயவும் நன்கு அறிந்திருந்தார். இதன் காரணமாகவே, சிங்கள மக்களின் வாக்குகளில் மட்டும் வெற்றிபெறுவதற்கான வியூகங்களை அவர் வகுத்தார். அவர் வகுத்த வியூகமும், ரணில்-மைத்திரி அரசாங்கத்தின் தவறுகளும் முக்கியமாக, ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னரான பதட்ட நிலைமையும் ஒன்றாக இணைந்தபோது, கோட்டாபய ராஜபக்‌ஷவின் வெற்றி இலகுவானது. ஒருவேளை ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் இல்லாதிருந்திருந்தால், சஜித் பிரேமதாச கடுமையான போட்டியை காண்பித்திருக்கலாம்.

சஜித் பிரேமதாச எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரவேண்டுமென்றாலும்கூட, அவர் தனித்து சிங்கள மக்களின் வாக்குகளில் வரமுடியாது. நிச்சயம் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவு அவருக்கு கட்டாயமானது. இதனை அவரும் தெளிவாக உணர்ந்திருப்பதாகவே தெரிகின்றது. இதன்காரணமாகவே, தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஓரளவு பூர்த்தி செய்வதற்கான அடித்தளத்தையும் அதேவேளை, அதிகார பகிர்விற்கான அடித்தளத்தையும் ஒருங்கே கொண்டிருக்கின்ற - 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில், ஆதரவான நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்திவருக்கின்றார். தெற்கில் சிலர் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் பேசுகின்றபோது, அதனை சஜித் கண்டிக்கத்தவறுவதில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள சிக்கலான பிராந்திய அரசியல் தலையீடுகளை அவர் தெளிவாக புரிந்து வைத்திருக்கின்றார். இதன்காரணமாகவே 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் தனக்குள்ள உடன்பாட்டை அவர் வெளிப்படையாக முன்வைத்துவருகின்றார்.

சஜித் கூறுவதுபோன்று, எதிர்காலத்தில் ஜெனிவா அழுத்தங்களை கொழும்பால் தோற்கடிக்க முடியும். மேற்குலகத்தோடு ஒத்துழைத்து, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி, மாகாண சபையை அரசியல் தலையீடுகளின்றி வினைத்திறனுடன் இயங்குவதற்கான சூழலை ஏற்படுத்தினால், சர்வதேச அழுத்தங்களை கணிசமாக குறைக்க முடியும். அத்துடன், இந்தோ- பசுபிக் மூலோபயத்தின் இலக்குகளை தெளிவாக விளங்கிக்கொண்டு, அதற்கேற்ப தாராளவாத உலக ஒழுங்கோடு ஒத்துழைத்தால், இலங்கைமீதான சர்வதேச அழுத்தங்களை நிரந்தரமாக இல்லாமல் செய்துவிடலாம். ஆனால் அது, கூறுவதுபோன்று - எழுதுவதுபோன்று - அவ்வளவு இலகுவானதல்ல.

# ஐ.நா. அமைதிப்படை!

- அலசுவது இராஜதந்திரி -

*இலங்கைமீது கொண்டுவரப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் 46-1 பிரேரணை உரிய வகையில் அமுல்படுத்தப்படாத பட்சத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை இலங்கைக்கு வரக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். சுமந்திரனின் இக்கருத்தை பார்க்கும்போது, பிரேணையை அமுலாக்குவதில் சிக்கல்கள் தலையெடுக்கும் நிலை தோன்றுவதற்கு இடமிருப்பதையே அவதானிக்க முடிகிறது.*

*இலங்கை இத்தடவை ஐ.நா மனித உரிமைகள் பிரேரணையை, அது கொண்டுவரப்பட்ட வேகத்திலேயே நிராகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதன்மூலம் இத்தடவை பிரேரணை இலங்கையில் அமுலாக்கப்படப்போவதில்லை என்ற செய்தியே அரச தரப்பினரால் இலங்கை மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் விடுக்கப்பட்டுள்ளதையும் நோக்க முடிகின்றது.*

**கடும் போக்கு**

*இன்றைய அரசின் கடும் போக்கை சுமந்திரன் நிச்சயம் முன்கூட்டியே அறிந்திருப்பார் என்றே கருத முடியும். பெரிதும் இடதுசாரிப் போக்கைக்கொண்ட இன்றைய ஆட்சியாளர்கள், மேற்கத்தைய செல்வாக்கிற்கு உட்படாதிருந்து வருகின்றனர். ஏற்கனவே இலங்கை அரசு ஐ. நா பிரேரணையை முற்றாக நிராகரித்த நிலையில், தமிழ் அரசியல் தரப்பும் சர்வதேச சமூகமும் எவ்வாறு ஐ. நா பிரேரணை அமுலாக்கப்படப்போகின்றது என்ற கேள்வியை எழுப்பியவையாக இருப்பதையே அவதானிக்க முடிகிறது. இக்கட்டத்திலேயே, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இலங்கையில் பிரேரணை நிறைவேற்றப்படாது அசாதாரண நிலைமை ஒன்று ஏற்படும் பட்சத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை இலங்கைக்கு வரும் சூழல் ஏற்படும் என்று எச்சரித்துள்ளார்.*

**ஐ.நா படையில் இலங்கை வீரர்கள்**

*அமைதிப்படை என்ற விடயம் இலங்கைக்கு புதிதானதல்ல. 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து அந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமான அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் குறித்து நிற்கின்ற மாகாண சபை ஆட்சிமுறையை வெற்றிகரமாக அமுல்படுத்த இந்திய அமைதிப்படை இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பிரசன்னமாகியிருந்தது. ஆனால், இந்திய அமைதிப்படை தனது முயற்சியில் தோல்வியைத் தழுவி, பின்வாங்கியதையே காணமுடிந்தது.*

*தற்போது மீளவும் அமைதிப்படை குறித்த பேச்சை சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவர் இத்தடவை ஐக்கிய நாடுகள் சபை அமைதிப்படைபற்றி குறிப்பிட்டுள்ளதை நோக்கும்போது, இலங்கை ஐ.நா பிரேரணையை நிராகரித்துள்ள நிலையில், ஐ.நா அமைதிப்படையினால் எவ்வாறு இலங்கையில் அப்பிரேரணையை அமுலாக்க முடியும் என்ற கேள்வி எழுந்துள்ளது.*

*ஐ.நா அமைதிப்படை என்ற விடயத்தை பார்க்கும்போது இலங்கைப் படை வீரர்கள் நீண்ட காலமாகவே ஐ.நா அமைதிப்படையில் அங்கம் வகித்து வருவதோடு, உலகில் பல்வேறு சர்ச்சைக்குரிய நாடுகளிலும் ஐ.நா படையில் ஓர் அங்கமாக இருந்து வந்துள்ளதையும் அவதானிக்க முடியும். இதுதவிர, இலங்கைப் படையினர் பலர் ஐ.நா படையில் பணியாற்றியவேளை தமது கடமையின்போது உயிரிழந்தும் உள்ளனர். ஆனால், தற்போது பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இலங்கை விடயத்தில் ஐ.நா அமைதிப்படைபற்றி குறிப்பிட்டுள்ளதை பார்க்கும்போது அவர் குறிப்பிட்ட விடயம் எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்ற கேள்வி எழுகின்றது.*

**சுமந்திரன் - மங்கள சமரவீர கூட்டு**

*சுமந்திரன் தற்போது கூறுபவற்றை பார்க்கும்போது, வடக்கு - கிழக்கு மக்களின் பேராதரவோடு பதவிக்குவந்த கடந்த ஆட்சியில் ஐ. நா மனித உரிமைப் பேரவையினால் கொண்டுவரப்பட்ட பிரேணைக்கு என்ன நடந்தது என்ற கேள்வி எழுந்துள்ளது. கடந்த ஆட்சியில் தமிழ் தேசியக் கூட்டமைப்புகூட பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக அங்கம்பெற்றிருந்ததோடு, கடந்த ஆட்சியாளர்கள்மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய வல்லமையும் கொண்டிருந்தது. ஆனால், தமிழ் தேசியக் கூட்டமைப்பே அன்றைய ஆட்சியாளர்களுக்கு ஐ. நா மனித உரிமை பேரவை பிரேரணையை நிறைவேற்றுவதில் காலஅவகாசத்தை பெற்றுக்கொடுக்க இணங்கியிருந்தது.*

*இக் காலஅவகாச விடயத்தில் அன்றைய வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவும் சுமந்திரனும் கைகோத்து நின்றமைகூட குறிப்பிடத்தக்கது. ஆனால் தற்போது, இலங்கையரசை பிரேரணை தொடர்பாக வழிக்குக்கொண்டுவருவதில் ஐ. நா படைகூட இலங்கை வருமென்று சுமந்திரன் கூறியிருப்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது.*

*ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இலங்கைமீதான 46-1 பிரேரணையை இலங்கையராசு முற்றிலுமாக நிராகரித்ததன்மூலம் சர்வதேச சமூகத்தின் எந்த அழுத்தங்களுக்கும் அடிபணியப்போவதில்லை என்பதையும், எத்தகைய சவால்களையும் ஐ. நா பிரேரணை விடயத்தில் சந்திக்க தயார் என்ற செய்தியையும் இலங்கை அரசு விடுத்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
உறவினருக்காக அலைந்து திரிந்து உதவ வேண்டியிருக்கும். செலவினங்கள் வந்தாலும் சமாளிக்கும்படிதான் இருக்கும். உங்களது திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வது நல்லது.

**இடபம்**
உழைப்புக்கேற்ற பலன் கிடைத்து மகிழ்வீர்கள். திட்டமிட்டு செயல்படுவது நல்லது. மகிழ்ச்சியாகப் பொழுது கழியும். எதிர்பாலின நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்**
நீண்ட கால பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு வரும். பிறரால் செய்ய முடியாதவற்றை செய்து பாராட்டுப் பெறுவீர்கள். பிள்ளைகளின் வாழ்வில் எதிர்பார்த்த முன்னேற்றம் தென்படும்.

**கடகம்**
மகிழ்ச்சியான செய்தி வந்து உங்களை பரவசப் படுத்தும். அக்கம் பக்கத்து வீட்டாருடன் அளவாகப் பழகுவது நல்லது. நண்பர்களோடு ஏற்பட்ட பகை தீரும். வீண் பயம் கூடும்.

**சிம்மம்**
வேற்று மதத்தவர் உதவுவார். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும் வேலையாட்கள் மதிப்பார்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். நன்மை அதிகரிக்கும். சம்பளம் உயர வாய்ப்பு உள்ளது.

**கன்னி**
மனைவியால் லாபமும் நன்மையும் உண்டாகும். நல்ல பெயரை காப்பாற்ற பொறுப்புடன் செயல் படுவீர்கள். செய்யும் பணியில் உயர்வான நிலை ஏற்படும்.

**துலாம்**
கௌரவமான பதவிகள் கிடைக்கும். பணிச்சுமை கூடும். வெளியூர், வெளிநாடுகளுக்கு செல்லும் விருப்பம் நிறைவேறும். மேலதிகாரியின் பாராட்டு மகிழ்ச்சி அளிப்பதாக அமையும்.

**விருட்சிகம்**
நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கும். பெயர், புகழ் தேடிவரும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கப்பெற்று மகிழ்வீர்கள். உங்கள் பேச்சிற்கு மதிப்பும், மரியாதையும் உயரும்படி நடப்பீர்கள்.

**தனுசு**
பயணங்களை மேற்கொள்வீர்கள். பண வரவுக்கு பஞ்சம் இல்லை. முயற்சிகளில் வெற்றி கிட்டும். உடல்நலம் சுமாராக இருக்கும். உங்களின் நோக்கம் கைகூடும். மகிழ்ச்சி நிலவும்.


**மகரம்**
பெரியோர் ஆலோசனைக்குத் தகுந்த பலன் கிடைக்கும். செலவைச் சமாளிக்க குறுக்கு வழியில் செல்ல வேண்டாம். சிறப்பாக எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை. கவனம் தேவை.

**கும்பம்**
சந்தோஷம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வாகன மாற்றம் பற்றி இப்போதைக்கு யோசிக்க வேண்டாம். புது தொடர்பு கிடைத்தால் அதன் நம்பகத்தன்மையை ஆராயுங்கள்.

**மீனம்**
பெரிய அதிர்ஷ்டம் எதையும் எதிர்பார்க்க வேண்டாம். அரசாங்கம் சம்பந்தமான விஷயங்களில் அனுகூலமான முடிவு வரும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். செல்வாக்கு அதிகரிக்கும்.

# மீண்டுமொரு ஊழல் ஆட்சிக்கு துணை போகவே வேண்டாம்!

## மக்களை எச்சரிக்கிறார் கமல்



**சென்னை, மார்ச் 28**

**நாட்டில் மீண்டுமொரு ஊழல் ஆட்சி ஏற்படுவதற்கு மக்கள் ஒருபோதும் துணை போகக்கூடாதென மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.**

ஊட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீலகிரி பகுதியில் கடந்த 50 வருடங்களாக மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு முன் வைக்கப்படவில்லை.

மேலும் சிறந்த அபிவிருத்தி செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. நேர்மையான அரசியலை முன்னெடுப்பதற்கு பணப் புழக்கத்தை இல்லாமல் செய்ய வேண்டும்.

அத்துடன் மக்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டும். ஊழல் ஆட்சிக்கு ஒருபோதும் துணை போகக் கூடாது-என்றார்.



# மக்களை குழப்பி ஸ்டாலின் ஆட்சிக்கு வரத் துடிக்கிறார்

## முதல்வர் பழனிசாமி தாக்கு

சென்னை, மார்ச் 28

மக்களை குழப்பி ஸ்டாலின் ஆட்சிக்கு வர துடிக்கிறார். அதிமுக எதுவுமே செய்யவில்லை என கூறும் ஸ்டாலின் என்னோடு நேருக்கு நேர் விவாதிக்க தயாரா என நெல்லை மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் பிரசாரம் மேற்கொண்ட முதல்வர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார் .

அவர் மேலும் பேசுகையில்-

பல்வேறு துறைகளில் இந்தியாவில் அதிகமான விருது பெற்ற மாநிலம் தமிழ்நாடு. ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு. கல்வியில் சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. உயர் கல்வி பெறுவதில் தமிழகம் தான் முதலிடம் பெறுகிறது. 4 ஆண்டுகளில் தமிழகத்தில் 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தந்த மாநிலம் தமிழ்நாடு. எதுவும் செய்யவில்லை என ஸ்டாலின் குற்றம் சாட்டுகிறார். இந்த ராதாபுரம் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் ஒரே மேடையில் என்னோடு நேருக்குநேர் விவாதிக்கத் தயாரா ? ஆனால் அவர் வர மாட்டார். அவர் கையில் சரக்கு ஏதும் இல்லை 4 ஆண்டுகளில் சட்டப்பேரவை நடந்த நாட்களில் அனைத்திலும் சட்டப்பேரவை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளேன். கூடுதல் நாட்கள் சட்டப்பேரவையில் கலந்து கொண்ட ஒரே முதலமைச்சர் நான்தான் என்ற பெருமையை உங்கள் மூலம் எனக்கு கிடைத்துள்ளது. ஊழலுக்காக கலைக்கப்பட்ட ஒரே ஆட்சி திமுக தான்-என்றார்.

# சந்தர்ப்பவாதக் கூட்டணியை அமைத்திருக்கிறது அ.தி.மு.க.

## கனிமொழி விமர்சனம்

நாகப்பட்டினம், மார்ச் 28

தமிழகம் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது உரிய நிவாரணத்தை தமிழக அரசால் கேட்டுப் பெற முடிந்ததா என, மக்களவை திமுக உறுப்பினர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாகை மாவட்டம் நாகூர் புதிய பேருந்து நிலையத்தில், நாகப்பட்டினம் சட்டப்பேரவை தொகுதி திமுக கூட்டணியின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் முகமது ஷாநவாஸை ஆதரித்து, கனிமொழி எம்.பி. நேற்று வாக்கு சேகரித்துப் பேசினார்.

அப்போது, அவர் பேசியதாவது:

எல்லோராலும் படிக்க முடியும் என்ற நினைப்பை கொண்டு வந்தவை திராவிட கட்சிகள். நம் வீட்டுப் பிள்ளைகள் மருத்துவம் படிக்க வேண்டும் என்பதற்காக மாவட்டந்தோறும் மருத்துக் கல்லூரிகளை கொண்டு வந்த கட்சி திமுக. ஆனால், தற்போது நம் பிள்ளைகளை மருத்துவம் படிக்க விடாமல் நீட் தேர்வை கொண்டு வந்த கட்சி பாஜக. இதனால் பல மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள்.

நீட் தேர்வை ஆதரித்து வாக்களித்த கட்சி அதிமுக. பாமக இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ், கவுன்சிலராக கூட தகுதி இல்லாதவர் முதல்வராகி விட்டார் என்று விமர்சனம் செய்தார். பாஜகவும் அதிமுகவை விமர்சனம் செய்து இருக்கிறது. ஆனால், அதைப்பற்றி கவலைப்படாமல் பதவி மேல் உள்ள வெறி யால் சந்தர்ப்பவாத கூட்டணியை வைத்திருக்கிறது அதிமுக. -என்றார்.

# ராசாவின் விமர்சனம் மிக அருவருப்பானது

## ராமதாஸ் கண்டனம்



சென்னை, மார்ச் 28

முதல்வரை இழிவுபடுத்தும் வகையிலான ஆ.ராசாவின் அருவருக்கத்தக்க வார்த்தைகளைக் கடுமையாகக் கண்டிக்கிறேன். பெண்மையைப் போற்றுபவர்கள் என்று தங்களைத் தாங்களே கூறிக்கொள்ளும் திமுக கூட்டணிக் கட்சிகளும், பிற கட்சிகளும் இதைக் கண்டிக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது அவர்களின் அரசியல் நேர்மை குறித்த ஐயங்களை ஏற்படுத்துகிறது என பாமக நிறுவனர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்-

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமியையும், திமுக தலைவர் ஸ்டாலினையும் ஒப்பீடு செய்யும் வகையில் திமுக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா தெரிவித்துள்ள கருத்துகள் மிகவும் அருவருக்கத்தக்கவை. பெரியாரின் திருவுருவப் படத்தைப் பின்னணியில் வைத்துக்கொண்டு பெண்மையை இழிவுபடுத்தும் வகையில் பேசப்பட்ட பேச்சுகள் மிகவும் கண்டிக்கத்தக்கவை.

சசிகலாவையும், முதல்வரையும் இழிவுபடுத்தும் வகையில் அருவருக்கத்தக்க ஒரு கருத்தைக் கூறி திமுகவின் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தான் இந்தப் பிரசாரத்தில் இத்தகைய அணுகுமுறையை தொடங்கி வைத்தார்.

அவரைத் தொடர்ந்து "முதல்வர் தரையில் ஊர்ந்து சென்றவர், "முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் மதிப்பு திமுக தலைவர் ஸ்டாலின் அணிந்துள்ள காலணியின் மதிப்பை விட ஒரு ரூபாய் குறைவு", "முந்தநாள் வரை வெல்லமண்டியில் வேலை செய்து வந்த எடப்பாடி பழனிசாமி ஸ்டாலினுக்கு ஈடாக முடியாது" என்றெல்லாம் அருவருப்பாக விமர்சித்து வந்த திமுக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா, அதன் உச்சமாக முதல்வரின் பிறப்பையும், வழிபடத்தக்க வகையில் வாழ்ந்து மறைந்து அவரது தாயார் தவசாயி அம்மாளையும் இழிவுபடுத்தும் வகையில் வார்த்தைகளைக் கொட்டியிருக்கிறார். இதை ஏற்றுக்கொள்ள முடியாது.-என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தியின் பின்னணியில்...

# ஒரு 'தோல்வி'யின் செய்தி!

மாலி





சியாமளா கோலி என்ற இந்திய பெண் பாக்கு நீரிணையை நீந்தி கடந்திருக்கிறார்.

ஹைதராபாத் தைச் சேர்ந்த 47 வயதான இவர், பாக்கு நீரி ணையை நீந்திக் கடந்த 13ஆவது நபர்; இரண்டாவது பெண்.

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த புலா சௌத்திரி முதலாவது பெண்ணாக, 34 வயதில் 2004இல் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு நீந்தினார்.

தனுஷ்கோடி கரையில் கால்வைத்தபோது சியாமளா கோலி, இலங்கைக் கடற்பரப்பைத் தாண்டி இந்திய கடற்பரப்பு, கடுமையான நீரோட்டத்துடன் தனக்கு பெரும் சவாலாக இருந்ததைத் தெரிவித்தவர் மறுகணமே, ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும் தனது அடுத்த அவாவை வெளிப்படுத்தினார். புலா சௌத்திரி, ஏற்கனவே இரண்டு தடவைகள் ஆங்கிலக் கால்வாயை 1989இலும், பின்னர் 1999இலும் நீந்திக் கடந்தவர்.

நீரிணை நீச்சலும், அதிலும் பாக்கு நீரிணை, ஆங்கிலக் கால்வாய் என்பதும் பேச்சாகினால், 'ஆழிக் குமரன்' ஆனந்தன் நம் நினைவில் வராமலிருப்பாரா! ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த (1958) முதல் இந்தியரான வங்காளத்தைச் சேர்ந்த மிஹிர் சென், பாக்கு நீரிணையை முதன்முதலாக (1966இல்) நீந்திய உலக சாதனைக்குரியவர் என்று சில இடங்களில் பதிவாகிறது. இது, தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்குமிடையேயான நீச்சலைக் குறிக்கிறதோ தெரியவில்லை. ஆனால் முன்னதாக 1954இல், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மு. நவரத்தினசாமி, வல்வெட்டித்துறையிலிருந்து கோடிக்கரை, கள்ளிமேடு முனைக்கு நீந்தியிருந்தார். பாக்கு நீரிணையை முதன்முதலாக நீந்திக் கடந்தவர் இவரேதான். பின்னர், இவருடைய மருகரான "ஆழிக் குமரன்" என்ற வி. எஸ். குமார் ஆனந்தன், இதே தூரத்தை 15 வயதில், 1963இல் நீந்தினார். 1974இல் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு முதன்முதலாக இருவழி சாதனையையும் புரிந்தார்.

ஆனந்தன் ஓர் அபூர்வ மனிதர். சாதனைகளைத் தேடுபவர். பாக்கு நீரிணையைக் கடந்த ஆனந்தனுக்கும் ஆங்கில கால்வாயை நீந்திக் கடக்கும் ஆவல் இயல்பிலேயே எழுந்தது. ஆங்கில கால்வாயை மூவழி கடந்தமை அப்போது சாதனையாகியபோது, அதனை நான்குவழி நீந்திக் கடப்பதில் அவர் குறிவைத்தார். அமெரிக்காவின் ஜோன் எரிக்சன், 1981இல் இச் சாதனையைப் புரிந்தார்.

மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் ஆறு மாதங்கள் வைத்தியசாலையில் அநுமதிக்கப்பட்டிருந்த நிலைலும் தன் எண்ணத்தில் ஆனந்தன் தளரவில்லை. 1984 ஒகஸ்டில், ஆங்கில கால்வாயை கடக்கும் முயற்சியிலான ஏற்பாடுகளுடன் லண்டன் வந்தார். ஓர் அவசரமும், அசட்டு நம்பிக்கையும் அவரிடம் தெரிந்தது. பொதுவாக ஆங்கில கால்வாயின் நீச்சலுக்குரிய பருவம்தான். எனினும், அந்த ஆண்டு அது அவ்வளவு சீராக இருக்கவில்லை. ஆனந்தனுக்கு இது சற்று சலிப்பாகவிருந்தது. பல தடவைகளில் அவருடைய பயிற்சிகளில் ஒன்றாக, அவருடைய சகோதரியின் இல்லத்திலிருந்து 15 மைல்கள் தூரம் நடந்து வந்து, திரும்புவார். கோடையிலும் வெந்நீரின்றி குளிக்கவியலாதபோது, குளிர் நீரிலேயே குளிப்பார்.

ஒகஸ்ட் 8ஆம் திகதி நீந்துவதற்கு அவருடைய Pilot இன் அநுமதி கிடைத்தது. பைலற் முதலானவர்களுடனான துணைப் படகில் செல்வதற்காக ஆனந்தனின் சகோதரர்கள் இருவரும், நண்பர்கள் இருவரும், நானும் அதிகாலையில் பிரிட்டிஷ் கரையான டோவரை அடைந்தோம். ஆனந்தன் மூன்று தினங்களுக்கு முன்னரேயே அங்கு சென்று பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்.

பலர் அன்றைய தினம் நீச்சலுக்காக காத்திருந்தார்கள். காலநிலையின் சீரற்ற தன்மை, எல்லோரிடத்திலும் ஓர் அங்கலாய்ப்பைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது. அமெரிக்கர் ஒருவருக்கு அனுமதி கிடைத்தது. சற்று நேரத்தின் பின்னர் ஆனந்தனுக்கும் எப்படியோ கிடைத்தது. ஆனந்தன் ஆயத்தமாகினார். உடம்பில் 'கிரீஸ்' பூசப்பட்டுக்கொண்டிருக்கையில் சில புகைப் படங்களை எடுத்தேன். "மாலி, தோல்வியைத்தான் செய்தியாக்கப்போகிறீர்போல் தெரிகிறது" என்றார். இது, ஆனந்தனின் அகராதியில் இல்லாத வார்த்தை.

நீச்சல் தொடங்கியாயிற்று. இரண்டரை, மூன்று மணித்தியாலங்கள்கடந்தது. கடலில் கொந்தளிப்பு அதிகரிப்பதை எமது படகே உணர்த்தியது. அந்த அமெரிக்கர் முயற்சியைக் கைவிட்டு, திரும்பி நீந்திக்கொண்டிருந்தார்.

ஆனந்தன் இடையிடையே பேசியபடி நீந்திக்கொண்டிருந்தார். "கடுமையான குளிர்" என்றும் சொன்னார். ஏதாவது பானம் அருந்துவார், நேரம் கேட்பார். நான்கு மணி நேரத்தை தாண்டியிருந்தது. அவரிம் சற்று மாறுதல் தெரிந்தது. வந்த வழியில் நீந்த ஆரம்பித்தார். தானாகவே கரை திரும்ப நினைக்கிறாரா? அல்லது, தன்னை அறியாமல் நீந்துகிறாரா? இதனை அவருக்கு உணர்த்தியபோது, தான் "ஓகே" என்று கூறி, சரியான திசையில் தொடர்ந்தார்.

நீச்சலை நிறுத்துவதான முடிவு யாருடையது? இது பெரும் கேள்விக்குரியது. இப்போது, அந்த முடிவு பைலற்றுக்கு இருந்தாலும், நீந்துபவர் சுய நினைவில் உள்ளவரை, அது அவருடையதாகவும் இருந்தது.

பானம் ஒன்று கேட்டு அருந்தியவர், சிறிது நேரத்தில் அருந்திய பானத்தை வாந்தி எடுத்தார். பைலற் முடிவுக்கு வந்தார். "நீங்கள் நலமாக இல்லை, கட்டாயமாக நிறுத்தவேண்டும்" என்று தெரிவித்து, கயிறு ஒன்றை அவரிடம் வீசினார்கள். கடலலையில் படகு விலகிச் சென்றது. கயிறு பற்றக்கூடியதாக எட்டவில்லை. படகைத் திருப்பி அணித்தாக கொண்டுசெல்ல முயற்சிக்கையில், ஆனந்தன் நினைவிழந்தவராக மிதந்தார். உடனே, இரு பாதுகாப்பாளர்கள் கடலினுள் பாய்ந்தார்கள். 'கிரீஸ்' பூசப்பட்டிருந்ததில், தூக்குவதில் அவர்கள் மிகுந்த சிரமப்பட்டார்கள்.

சற்று நேரத்துக்குள் அங்கு வந்துசேர்ந்த அரச விமானப் படை ஹெலிகொப்டர், நினைவற்ற நிலையிலிருந்த ஆனந்தனை தூக்கிச் சென்றது. படகில் நாம் கன்ரபரிக்கு கரை திரும்பியபோது, பொலிசார் இருவர் அங்கு எமக்காக காத்திருந்தார்கள். "மன்னிக்கவும், அவர் இறந்துவிட்டார்"- அவர்கள் சொன்னார்கள்.

இந்த முடிவுடனான 'தோல்வி'யைத்தான் ஆனந்தன் சொன்னாரா? சுயநினைவுடன், தன்னுடைய முயற்சியை நிறுத்த அநேகமாக அவர் சம்மதித்திருக்கமாட்டார். ஒருவேளை, காலநிலை நிர்ப்பந்தத்தை அல்லது தான் நினைவிழக்கும் நிலையை எதிர்பார்த்திருப்பாரா?

ஆங்கிலக் கால்வாயில் இப்படி உயிரிழந்தவர்களில் ஆனந்தன் மூன்றாமவர். இதுவரை, பத்துப் பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

இயக்குநர் மௌலியின் திரைப்படம் ஒன்றில், 1300 cc மோட்டார் சைக்கிளை ஓடும் காட்சி ஒன்றுக்கான ஒப்பந்தம்தான் ஆனந்தனின் இந்த அவசரத்துக்கு காரணமாக இருந்ததாக தெரிகிறது.

சாரா தோமஸ் என்ற அமெரிக்க பெண், 2019இல் ஆங்கில கால்வாயை நான்குவழி நீந்தி, ஆனந்தன் அவாவிய அந்த சாதனையை சாதித்திருக்கிறார்.

# அரசின் கொள்கையை முன்னிலைப்படுத்த அனைவரும் உறுதியாக இருக்க வேண்டும்

## ஜனாதிபதி கோட்டாபய வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 28

தனிநபர்களை அல்லாது அர சாங்கத்தின் கொள்கைகளை முன்னிலைப்படுத்த அனைவரும் உறுதியாக இருக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

கொள்கைகள் தோல்வியுற்றால், நாடு மீண்டும் அழிவுக்குள்ளாவ தைத் தவிர்க்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்துள்ள எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்து அபிவிருத்திப் பணிகளைத் தொடர வேண்டும். அரசாங்கத்தின் திட்டங்களை முறையாகச் செயல் படுத்துவதன் மூலம் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு அளித்த ஆதரவையும் அர்ப்பணிப்பையும், அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை முன்னெடுப்பதில் அனைவரிடமிருந்தும் எதிர்பார்க்கின்றேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (எ)

# பலவழிகளில் பலிக்கடாக்களாக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்துக்கும் நீதி வேண்டும்!

## வேலுகுமார் எம்.பி.கோரிக்கை



கண்டி, மார்ச் 28

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அனைத்து விடயங்களும் கண்டறியப்பட்டு நீதி நிவாரணத்துக்காக ஏங்கித் தவிக்கும் கத்தோலிக்க சமூகத்துக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

அதேபோன்று, இந்தத் தாக்குதலை அடிப்படையாகக்கொண்டு அரசியல், பொருளாதாரம் மற்றும் இதர வழிகளில் பலிக்கடாக்களாக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்துக்கும் நீதி கிடைக்கவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி அலுவலகத்தில் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் சிலருடன் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற "சமூக நீதி" தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)



# ரஷ்ய தூதுவர், பாதுகாப்பு செயலாளர் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 28

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர், யூரி மேட்டரி பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை நேற்று சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் ரஷ்ய தூதுவர் ஆகியோருக்கிடையில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இலங்கைக்கு தொடர்ச்சியாக ஆதரவளித்து வந்தமைக்காக ரஷ்ய தூதருக்கு ஜெனரல் குணரத்ன நன்றி தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் ரஷ்ய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் டெனில் ஐஷ்கோடா மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு பிரிவுக்கான மேலதிக செயலாளர் பிபிஎஸ்சி நோனிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2024 ஜனாதிபதித் தேர்தல்

# சஜித்துக்கு எதிராக வியூகம் வகுக்கின்றாரா சம்பிக்க?

கொழும்பு, மார்ச் 28

**ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது மாநாடு அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் கோலாகலமாக நடைபெற்றது. இம்மாநாட்டில் உரையாற்றிய அரசியல் பிரமுகர்கள், தற்போதைய அரசின் செயற்பாடுகளை சரமாரியாக விமர்சித்ததுடன், 2024 இல் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி மலரும் எனவும் நம்பிக்கை வெளியிட்டனர்.**

'43' எனும் அரசியல் இயக்கத்தை ஆரம்பித்துள்ள சம்பிக்க ரணவக்கவும் மாநாட்டில் பங்கேற்று ராஜபக்ஷக்களை தனக்கே உரிய பாணியில் கடுமையாக விளாசித் தள்ளினார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கும் நோக்கிலேயே ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து சம்பிக்க ரணவக்க தனது சகாக்களுடன் வெளியேறினார். எனினும், அவர் இன்னும் உறுப்புரிமை பெறவில்லை. ராஜித சேனாரத்ன, குமார வெல்கம ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தி யில் உறுப்புரிமையை பெற்றிருந்தாலும் சம்பிக்க விவகாரமே இன்னும் இழுபறியில் இருக்கின்றது.

முதலாவது மாநாட்டுக்கு முன்னர் இப்பிரச்னைக்கு முடிவு காணப்படும் என அறிவிப்புகள் வெளியாகியிருந்தாலும், குழப்பநிலை நீடிப்பதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக சம்பிக்க ரணவக்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதித் தலைவர் பதவியை வழங்குவதற்கு அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். மறுபுறத்தில் அதிகாரமற்ற பதவியை ஏற்பதற்கு சம்பிக்கவும் தயாரில்லை. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவர் 43 எனும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளார்.

மாநாட்டுக்கு முன்னர் சம்பிக்க ரணவக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார். இதன்போது '43' எனும் அரசியல் இயக்கத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் ஓர் கிளையாக கொண்டு நடத்துமாறு யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. எனினும், இறுதி முடிவு எட்டப்படவில்லை.

இதற்கிடையில் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே சம்பிக்க இவ்வாறானதொரு இயக்கத்தை ஆரம்பித்துள்ளார் என்ற விமர்சனமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியானது சஜித் பிரேமதாசவை பெயரிட்டுள்ளது. ஆக சஜித்துக்கு எதிராக சம்பிக்க செயற்படுவாரா என்ற வினாவும் எழுகின்றது.

# யாழ்.மாநகரில் முடக்கப்பட்ட பகுதிகளில் இன்று காலை பி.சி.ஆர். பரிசோதனைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்ததால் நேற்று தொடக்கம் யாழ். மாநகரின் முடக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், முகாமையாளர்கள், பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவருக்குமான பி.சி.ஆர். பரிசோதனை இன்று நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு யாழ். நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் மூன்று இடங்களில் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் மேற்படி பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, அனைவரும் குறித்த நேரத்திற்குத் தங்களது அடையாள அட்டை அல்லது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் தவறாது வருகை தந்து பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், யாழ். மாநகர சந்தைப் பகுயில் உள்ள வியாபாரிகள் இதுவரை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளாமல் இருப்பின் அவர்களும் இந்தப் பரிசோதனையில் தவறாது கலந்துகொண்டு தங்களுக்கான பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது. (அ)

புற்றுநோய் அபாயம்

# நாடு முழுவதும் விற்பனை நிலையங்களில் தேங்காய் எண்ணெயை பரிசோதிக்க திட்டம்

கொழும்பு, மார்ச் 28

நாடு முழுவதும் உள்ள நகரங்களில் தேங்காய் எண்ணெய் மாதிரிகளை பரிசோதிக்கும் சிறப்பு நடவடிக்கையை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை ஆரம்பித்துள்ளது.

புற்றுநோயை ஏற்படுத்தும் வகையிலான தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தற்போது எழுந்துள்ள சர்ச்சையை அடுத்தே இந்த பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று அதிகாரசபையின் தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க தெரிவித்தார்.

"இந்த நோக்கத்திற்காக பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் அப்லாடாக்சின் (aflatoxin) என்ற புற்றுநோயைக் கொண்டிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. அவ்வாறு எடுத்து வரப்பட்ட நிறுவனத்தின் தேங்காய் எண்ணெய் சீல் வைக்கப்பட்டுள்ளது.

அதுதொடர்பான மேலதிக விசாரணைகளை இலங்கை சுங்கம், தர நிர்ணய நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது" என்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவர் சாந்த திசாநாயக்க தெரிவித்தார்.

# மாகாணத் தேர்தல் குறித்து இறுதித் தீர்மானம் நாளை!

கொழும்பு, மார்ச் 28

மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முறைமை தொடர்பான இறுதித் தீர்மானம் நாளை கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கமைய, முன்னர் போன்று பழைய விருப்பு வாக்கு முறைமைக்கு அமைய தேர்தலை நடத்துவதா? அல்லது புதிய தொகுதி முறைமைக்கு அமைய தேர்தலை நடத்துவதா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனினால், இதற்கான 2 மாற்று யோசனைகள் அடங்கிய அமைச்சரவைப் பத்திரம் கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பான பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அமைச்சர்கள் சிலர் அறிவித்திருந்தனர்.

எனவே, குறித்த அமைச்சரவைப் பத்திரத்தை, கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை ஒரு வாரம் பிற்போடப்பட்டது.

இந்தநிலையில், அந்த அமைச்சரவைப் பத்திரம் நாளை கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# தரமற்ற தேங்காய் எண்ணெய் இறக்குமதிக்கு அனுமதியாதீர்

தரமற்ற தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்ய தனிநபர்களை அனுமதிக்கக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. நேற்று சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அக்கட சியின் பாராளுமன்ற உறுப் பினர் ஹர்ஷன ராஜகருணா இவ்வாறு கூறினார்.

அண்மையில் தரமற்ற தேங்காய் எண்ணெய் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டமையை சுட்டிக்காட்டிய அவர், நுகர்வுக்கு ஏற்ற எண்ணையை மட்டுமே இறக்குமதி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார். எனவே இவ்வாறு தரமற்ற தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்து சுத்திகரித்து பின்னர் சந்தைக்கு வழங்குவதற்கான அனுமதியை வழங்கக்கூடாது என்றும் அவர் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.

# இரண்டு கனரக வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

திருமலை, மார்ச் 28

திருகோணமலை, ஹபரணை பிரதான வீதியில் கொள்கலன் ஒன்றும் லொறியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் அவ்வாகனங்களில் சென்ற மூவர் படுகாயமடைந்துள்ளதாக ஹதரஸ்கொட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு வாகனங்களும் விபத்துக்குள்ளாகி பாலமொன்றினுள் விழுந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

இவ்விபத்து சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. இதில் பயணம் செய்த லொறியின் சாரதியொருவரும், கொள்கலனின் சாரதியும் அதன் உதவியாளரும் படுகாயமடைந்த நிலையில் ஹபரணை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# ஒரு மில்லியன் மக்களிடம் பிறப்புச் சான்றிதழ் இல்லை

டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

தற்போது நாட்டில் வசிக்கும் 18 மில்லியனில் ஒரு மில்லியன் மக்களிடம் பிறப்புச் சான்றிதழ் இல்லை என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரி வித்தார்.

கம்புறுப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் பலர் தேசிய அடையாள அட்டைகள் இல்லாமல் இருப்பதாகவும் இதனால் அவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தேர்தல்கள் நெருங்கும்போது மட்டுமே அரசியல்வாதிகள் தேசிய அடையாள அட்டை தொடர்பாக கூறி வாக்குகளைப் பெறுவார்கள் என்றும் அமைச்சர் கூறினார். (அ)

# வடமாகாண தொற்றுநோயியல் வைத்தியசாலையை 600 மில்லியன் ரூபா நிதியில் மேம்படுத்தத் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கு மாகாணத்துக்கான தொற்றுநோயியல் வைத்தியசாலையை 600 மில்லியன் ரூபாய் நிதியில் அதிநவீன வசதிகளுடன் மேம்படுத்த திட்ட முன்மொழிவு அமைச்சரவையில் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கான நிதிப்பங்களிப்பை உலக வங்கி வழங்குகிறது.

நாட்டில் மேல் மாகாணத்தில் அங்கொடையில் தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலை அமைந்துள்ளது.

மேலும் 6 மாகாணங்களில் தொற்றுநோயியல் வைத்தியசாலைகளை அமைக்க சுகாதார அமைச்சு முன்மொழிவுகளைக் கோரியிருந்தது.

வடக்கு மாகாணத்துக்கான தொற்றுநோயியல் வைத்தியசாலை கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதனை அதிநவீன வசதிகளுடன் மேம்படுத்துவதற்கான திட்ட முன்மொழிவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் என். சரவணபவன் தலைமையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் 600 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்புடன் இந்த வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளது.

அந்த இடத்தில் கடந்த வருடம் கோவிட் -19 சிகிச்சை நிலையம் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்துக்கான தொற்று நோயியல் வைத்தியசாலையாக அதனை மேம்படுத்துவதற்கு திட்ட முன்மொழிவு அமைச்சரவையின் அனுமதிக்காக சுகாதார அமைச்சிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல் நடத்தவே வேண்டாம்!

## அபாயச் சங்கு ஊதுகின்றது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

**கொழும்பு, மார்ச் 28**

**நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு எஞ்சியுள்ள ஒரே வழி மாகாணசபை முறைமையாகும். எனவே, தற்போதைய சூழ்நிலையில் மாகாணசபைகளுக்கான தேர்தலை அரசு நடத்தவேகூடாது." என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கிலேயே மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியாவும், மேற்குலகமும் ஜெனிவாத் தொடரில் வலியுறுத்திவருகின்றன. மேற்படி அழுத்தங்களுக்கு அரசு அடிபணியக்கூடாது. மாறாக இந்தியாவையும், மேற்குலகையும் திருப்திப்படுத்துவதற்காக தேர்தல் நடத்தப்படுமானால் பாரிய விளைவுகளை சந்திக்கவேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும்.

தற்போதைய மாகாணசபை முறைமை என்பது நிர்வாக ரீதியில் வெள்ளை யானையாகும். நாட்டை பிளவுபடுத்துவதற்கு எஞ்சியுள்ள வழியாகவும் அது அமைந்துள்ளது. எனவே, அத்தகைய முறைமைக்கு அரசு உயிர் கொடுக்க முற்படக்கூடாது.

புதிய அரசமைப்பு ஊடாக அபிவிருத்தி சபைகள் உருவாக்கப்பட்டு, பிரிவினைவாத சிந்தனைகள், கோட்பாடுகளை தடை செய்துவிட்டு வேண்டுமானால் அந்த அபிவிருத்தி சபைகளுக்கு அரசு தேர்தலை நடத்தலாம். அதற்கு முன்னர் நடத்தக்கூடாது. 13ஆவது திருத்தச்சட்டமும் எமது நாட்டுக்கு அவசியம் இல்லை-என்றார்.

# புளியம்பொக்கணை பொங்கல் விழா: 100 பேர் மட்டும் பங்கேற்க அனுமதி!

கிளிநொச்சி, மார்ச் 28

கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயப் பொங்கல்விழாவுக்கு வெளிமாவட்டத்திலிருந்து வருகைதரும் பக்தர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டம் உள்ளிட்ட பல பகுதிகளில் கொவிட் 19 பரவல் அதிகரித்து காணப்படும் நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்த கண்டாவளை பிரதேச செயலகம் இவ்விடயத்தை நேற்று அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலாளர் தங்கவேலாயுதம் பிருந்தாகரன் தெரிவிக்கையில்-

யாழ். மாவட்டம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் கொவிட் 19 தொற்று அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த நிலையில் எமது பிரதேசத்தில் உள்ள பிரசித்தி பெற்ற புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழாவுக்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன.

அரசாங்க அதிபரின் பணிப்புக்கு அமைவாக இன்று குறித்த பொங்கல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில் அவசர அவசரமான தீர்மானங்கள் சிலவற்றை எடுக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதற்கு அமைவாக கோவில் நிர்வாகத்தினர் மற்றும் பிரதேச செயலகம் ஆகியன கலந்துரையாடி சில தீர்மானங்கள் நேற்று எடுக்கப்பட்டுள்ளன.

அதற்கு அமைவாக குறித்த பொங்கல் நிகழ்வுக்கு வெளி மாவட்டங்களிலிருந்து எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். 100 பேருக்கு குறைவானவர்களே பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்ள முடியும். குறித்த விடயம் தொடர்பில் கோவில் நிர்வாகத்தினர் பொறுப் புடன் செயற்படுவதாக வாக்குறுதி அளித்துள்ளனர். அறிவுறுத்தலுக்கு அமைவாகப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

நாட்டில் காணப்படும் கொவிட் 19 பரவலை கருத்தில் கொண்டு பொதுமக்கள் குறித்த ஆலயப் பொங்கல் விழாவில் கலந்து கொள்வதைத் தவிர்க்குமாறும், பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்-என்றார்.

# பெகஸூஸ் மென்பொருளை பயன்படுத்தி அனைவரையும் கண்காணிக்கிறது அரசு!

## சபையில் ஹரீன் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, மார்ச் 28

அரசாங்கம் பெகஸூஸ் எனும் மென்பொருளைப் பயன்படுத்தி அனைவரையும் கண்காணித்து வருவதாகவும், தனிப்பட்ட விடயங்களைக் கண்காணிப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ அதிர்ச்சித் தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

பெகஸூஸ் (ூபயளரள) எனும் மென்பொருள் ஒன்று அரசாங்கத்தால் கையாளப்படுகின்றது. இந்த மென்பொருள் மிக ஆபத்தானது. இந்த மென்பொருளைப் பயன்படுத்தி உங்களின் கமராவில் உள்ள வீடியோவை கையாள முடியும். நீங்கள் எங்கு உள்ளீர்கள் எனக் கண்டறிய முடியும். எனவே, அரசாங்கம் எதிர்க்கட்சியை ஆராய்வதை விடவும் ஆளும் கட்சிக்குள் என்ன நடக்கின்றது என்பதையே ஆராய்கின்றது என்ற விடயத்தை நான் பொறுப்புடன் கூறுகின்றேன்.

தொலைத்தொடர்பு ஆணைக்குழு, ஏனைய தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு ஒன்றைக் கூருகின்றேன். இவ்வாறான மோசமான செயல்களில் நீங்கள் சம்பந்தப்பட்டால் என்றாவது ஒருநாள் இந்த அரசாங்கம் கவிழும், அப்போது நீங்கள் பதில் கூறியாக வேண்டும்.

மக்களிடையே தனிப்பட்ட செயல்பாடுகள் இருக்க வேண்டும். அனைவருக்கும் அரசியல் நிலைப்பாடு என ஒன்று இருக்க வேண்டும். ஊடகவியலாளர்களுக்கு சுயமாக கருத்துத் தெரிவிக்கும் உரிமை இருக்க வேண்டும்.

இவ்வாறு மக்களைக் கட்டுப்படுத்த வெட்கமில்லையா? என்றே அரசாங்கத்தைக் கேட்கின்றேன். களவு, பொய், ஊழல் இல்லையென்றால் எதற்காக இவ்வாறான கீழ்த்தரமான செயல்களில் அரசாங்கம் ஈடுபடுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் இங்குள்ள உறுப்பினர்கள் உரையாற்ற 8, 10 நிமிடங்களே வழங்கப்படுகின்றன.

ஆனால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன உரையாற்ற 60 நிமிடங்கள் வழங்கப்பட்டன. அவர் அந்தத் தாக்குதலில் தனக்கு தொடர்பில்லையென்று கூறி தன்னைச் சுத்தப்படுத்தத்தவே அரச தரப்பால் இந்த 60 நிமிடங்களும் அவருக்கு வழங்கப்பட்டன- என்றார். (எ)

# இஸ்லாமிய இராச்சியமொன்றை உருவாக்க முயன்றார் சஹ்ரான்

## வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 28

சஹ்ரான் நீண்ட காலத்திட்டத்தில் இலங்கையில் இஸ்லாமிய இராச்சியமொன்றை உருவாக்கும் நோக்கத்தில் செயற்பட்டிருந்தார். ஆனால், அத்தருணத்தில் அவருக்கு பின்புலமாகவிருந்த சர்வதேச சக்திகள் குண்டுத் தாக்குதல்களை நடத்துமாறு கட்டளையிட்டதால்தான் அவர் தாக்குதல்களை நடத்தினார் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஹ்ரான் இஸ்லாமிய அடிப்படைவாத வன்முறைக் கருத்துகளை உருவாக்கியது உண்மைதான். இலங்கையில் இஸ்லாமிய இராச்சியம் ஒன்றை உருவாக்குவது அவருடைய நோக்கமாக இருந்தது. அது நீண்டகால வேலைத்திட்டமாகும். அவ்வாறு நீண்ட வேலைத்திட்டமாக அது இருக்கின்ற சந்தர்ப்பத்தில் பாதியில் அவர் குண்டுத்தாக்குதல்களை நடத்தி உயிரிழந்தது ஏன்?. அதற்கான பதிலை நாம் கண்டறிய வேண்டும். அவ்வாறு இல்லாமல் இதன் ஆரம்பத்தை தேடிக்கொள்ள முடியாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னால் அரசியல் பின்புலம் உள்ளது. அரசியல் நோக்கம் உள்ளது. தாக்குதல்களை நடத்தியது யார்? அவர்களின் பின்புலத்தில் யார் யார் இருந்தனர் என்பதை மாத்திரம் ஆய்வுக்கு உட்படுத்துவது போதுமானதல்ல.

சர்வதேச சதித்திட்டம் இதன் பின்புலத்தில் உள்ளதாக கர்தினால் கூறியுள்ளார். ஆனால், ஆணைக்குழுவின் அறிக்கையில் அவ்வாறு எதுவும் இல்லை. இந்தச் செயற்பாடுகள் ஆரம்பமான காலத்தில் ரணில் விக்கிரமசிங்கதான் பொலிஸூக்கு பொறுப்பாக இருந்தார். ஆனால், ஆணைக்குழுவின் அறிக்கையில் அவரது பெயர் இல்லை. அது தொடர்பில் கவலையடைகிறேன். பொலிஸ் செயற்பாடுகள் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அத்தருணத்தில் நாம் குற்றச்சாட்டுகளையும் சுமத்தியிருந்தோம். கடந்த அரசாங்க காலத்தில் மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டனர். ஜனாதிபதித் தேர்தலையும் பிற்போடும் தேவையே அவர்களுக்கு இருந்தது. இல்லாவிட்டால் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறாத ஒரு சூழலை உருவாக்குவது அவர்களது எண்ணமாகும். நாட்டில் பாரிய கலவரமொன்றை ஏற்படுத்தி எம்.சி.சி உடன்படிக்கையை கைச்சாத்திட்டு ஏகாதிபத்தியத்தை உருவாக்க முற்பட்டனர். அதனால்தான் சஹ்ரான் ஊடாக குண்டுத் தாக்குல்களை நடத்தினர்-என்றார்.

# மரண அறிவித்தல்



## பரதன் இராஜநாயகம்

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட **பரதன் இராஜநாயகம்** (முன்னாள் நிதர்சனம் பொறுப்பாளர்) கடந்த 18.03.2021 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

இவர் வினோதினி (நடன, சங்கீத ஆசிரியை)யின் அன்புக் கணவரும், பார்க்கவி, அபிமன்யூ ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராஜநாயகம், காலஞ்சென்ற சிவயோகம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற லிங்கநாதபிள்ளை, மகாலக்ஷ்மி தம்பதிகளின் மருமகனும், பாரதி, சுரபி ஆகியோரின் அன்புச் சகோதரரும், துஷ்யந்தன், தாக்ஷாயிணி, கேதீஸ்வரன், சிவராஜா, தேவகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்தினி, சற்குணம், சுஜீந்திரா ஆகியோரின் சகலனுமாவார்.

இறுதி வணக்க நிகழ்வு 31.03.2021 புதன்கிழமை லண்டன் நேரம் முற்பகல் 10.00 மணிமுதல் 12.00 மணிவரை இடம்பெற்று, பின்னர் தகனம் செய்யப்படும்.

**தகவல்:**

**பாரதி (சகோதரன்) 0094 777 304 010**

**கேதீஸ்வரன் (மைத்துனர்) 0094 776 334 402**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021:

# சிக்கிய ரூ. 265 கோடி சிக்காமல் தப்பியது யார்?

ஆ. விஜயானந்த்
பிபிசி தமிழுக்காக

தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டப் பேரவைகளுக்கு வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப் பட உள்ளது. தேர்தல் திகதி நெருங்கிக் கொண்டி ருப்பதால் அரசியல் கட்சிகள் பலவும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.



அதேநேரம், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால் பறக்கும் படை, கண்காணிப்புக் குழு, வருமான வரித்துறை ஆகியவை மூலம் மாநிலத்தில் பரவலாக தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல் ஹாசனின் ஆதரவாளர்கள், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு உள்பட பலரும் வருமான வரித்துறையின் சோதனைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

**கதிகலங்கும் கரூர்**

தமிழகத்திலேயே கரூர் மாவட்டத்தில் இருந்து மட்டும் 487 புகார்கள் வந்துள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ தெரிவித்துள்ளார். "இந்தப் புகார்களில் 440 புகார்கள் உண்மைத்தன்மை உடையவை" எனவும் அவர் கூறியுள்ளார்.

இதுதவிர, தேர்தல் ஆணையத்தின் பறக்கும் படை அதிகாரிகள் தொடர் சோதனைகள் மூலம் கணக்கில் காட்டப் படாத பணம், பரிசுப் பொருள்கள், தங்கம், வெள்ளி நகைகள், மதுபானங்கள் ஆகியவற்றைப் பறிமுதல் செய்துள்ளனர். இதுகுறித்து தலைமைச் செயலகத்தில் கடந்த 24 ஆம் தேதி செய்தியாளர்களிடம் பேசிய சத்யபிரதா சாஹூ, "தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் 4,004 பேர் போட்டியிடுகின்றனர். இதுவரையில் சி-விஜில் மூலம் 1,607 புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் கரூர் மாவட்டத்தில் 487, கோவை 365, திருப்பூர் 131, சென்னை 130, கன்னியாகுமரி 126 என்ற அளவில் புகார்கள் வந்துள்ளன.

**வேட்பாளரிடம் சிக்கிய ரூ.1 கோடி**

"நாங்கள் நடத்தும் வாகன சோதனையில் பத்து லட்ச ரூபாய்க்கு மேல் பிடிபட்டால் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மூலம் வருமான வரித்துறைக்குத் தகவல் தெரிவிக்கப்படும். இதில், முசிறி தொகுதி அ.தி.மு.க எம்.எல்.ஏ செல்வராஜின் காரில் இருந்து ஒரு கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாகவும் வருமான வரித்துறை விசாரணை நடத்தி வருகிறது. அனைத்து தொகுதிகளிலும் செலவின பார்வையாளர்கள், வேட்பாளர்களின் கணக்குகளைக் கண்காணித்து வருகின்றனர்" என்றார்.

இதுவரை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்ட ரொக்கம், பரிசுப் பொருட்கள், மது வகைகள், தங்கம், வெள்ளி நகைகள் போன்றவற்றின் மதிப்பு ரூ. 265 கோடியே 45 லட்சமாகும். இதில் ரொக்கம் மட்டும் ரூ.115 கோடி என்று சத்யபிரதா சாஹூ கூறினார்.

"தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகளை எப்படிப் பார்க்கிறீர்கள்?" என பல்லாவரம் தொகுதி மக்கள் நீதி மய்யம் வேட்பாளரான சமூக ஆர்வலர் செந்தில் ஆறுமுகத்திடம் கேட்டோம்.

"தமிழ்நாட்டுக்கு இரண்டு செலவின பார்வையாளர்களை நியமித்துள்ளனர். தமிழ்நாட்டில் தேர்தல் செலவுகள் அதிகமாக சென்று கொண்டிருப்பதால் செலவின பார்வையாளர்களை நியமிக்கிறோம் என தேர்தல் ஆணையம் தெரிவித்தது. அவர்கள் வெறும் பார்வையாளர்களாகவே இருப்பதுதான் வேதனை" என்கிறார்.

**ஒருநாள் செலவே ரூ. 30 லட்சமா?**

தொடர்ந்து பேசுகையில், "ஒரு வேட்பாளர் 30.8 லட்ச ரூபாயை செலவு செய்யலாம் என அளவு நிர்ணயித்துள்ளனர். தற்போதைய சூழலில் இதனை ஒருநாள் செலவாகக்கூட எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு தொகுதியிலும் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் சராசரியாக 10 கோடி முதல் 20 கோடி ரூபாய் வரை செலவு செய்கின்றனர். வேட்பு மனு தாக்கல் செய்ய வந்தாலே, 100 பேரைக் கூட்டி வருகின்றனர். கடைசி நேரத்தில் ஓட்டுக்குப் பணம் கொடுக்கும் வேலைகளும் நடக்க உள் ளன. முன்பெல்லாம் ஆம்புலன்ஸ்களில் வைத்துப் பணத்தைக் கொண்டு சென்றதையும் பார்த்திருக்கிறோம். இப்போது வேறு வகையான உத்திகளைக் கையாளுகின்றனர்.

தேர்தல் ஆணையத்தின் கணக்குப்படி ஒவ்வொரு உணவுக்கும் விலைப் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒரு செட் பூரி சாப்பிட்டால் 45 ரூபாய் என்கின்றனர். இதுதவிர, சுவரொட்டி, நோட்டீஸ் என ஒவ்வொன்றுக்கும் ஒரு கணக்கு இருக்கிறது.

இதனை "நிழல் பதிவேடு" என்ற ஒன்றின் மூலம் தேர்தல் ஆணைய அதிகாரிகள் பராமரித்து வருகின்றனர். உண்மையாகவே, நிழல் பதிவேட்டைப் பராமரித்தால் வேட்பாளர்கள் சொல்லும் கணக்குகள் எல்லாம் தாண்டிவிடும். இந்தத் தொகை கட்டுப்படியாக வாய்ப்பில்லை. ஒவ்வொரு தேர்தலிலும் தேர்தல் ஆணையத்தால் பல நூறு கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்படுகிறது.

**சிக்குவது சிறிய மீன்கள்தான்**

தேர்தல் முடிந்த பிறகு ஆணையத்தின் அதிகாரிகள் கொடுக்கும் விளக்கத்தில், டிரைவர், கூரியர் நிறுவன ஊழியர்கள்தான் சிக்க வைக்கப்படுகின்றனர். அந்தப் பணத்துக்கு உரிமையாளர் எவரோ, அவர் மீது எந்த நடவடிக்கை எடுக்கப் படுவதில் "சிறிய மீன்கள் மட்டுமே பிடிபடுகின்றன" என தேர்தல் ஆணைய அதிகாரிகளும் வேதனைப்படுகின்றனர். ஒவ்வொரு தேர்தலிலும் இவர்கள் பாதிக் கிணறுகளை மட்டுமே தாண்டுகின்றனர். அதுதான் பிரச்னை" என்கிறார்.

"தேர்தல் ஆணையத்தால் ஏன் உறுதியான நடவடிக்கை எடுக்க முடியவதில்லை?" என மூத்த பத்திரிகையாளர் என்.அசோகனிடம் பேசினோம்.

"தேர்தலில் உலவும் பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்த தேர்தல் ஆணையம் ஆங்காங்கே பணத்தைப் பறிமுதல் செய்வதைப் பார்க்கிறோம். இதில் அப்பாவிகள் பலரும் தங்கள் சொந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு போய் சிக்குவதையும் பார்க்கிறோம். இன்னொரு பக்கம் அரசியல் கட்சிகள் எல்லாம் பல்வேறு தந்திரங்களைப் பயன்படுத்தி பணத்தைக் கொண்டு போய் சேர்த்து வைத்து விட்டன.

**டோக்கன் சிஸ்டம்**

வாக்காளர்களுக்கு நேரடியாகப் பணம் கொடுக்காமல் டோக்கன் முறையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

தேர்தல் ஆணையத்துக்கும் இது தெரியும். அவர்களால் இந்த விஷயத்தில் எதையும் செய்ய முடியாது. ஏற்கெனவே பிடிபட்ட பணம் என்ன ஆனது. அது தொடர்பாக தண்டனை வழங்கப்பட்டதா என்றால் அதுவும் இல்லை. "நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறேன். நீ அழுகிற மாதிரி அழு" என்ற போக்கில் தான் நிலைமை போய்க்கொண்டிருக்கிறது. பணத்தை எதிர்பார்க்கும் சில வாக்காளர்கள் வாழும் இந்த சமூகத்தில் தேர்தல் ஆணையத்தைக் குறை கூறி என்ன பயன் என நினைக்கத் தோன்றுகிறது" என்கிறார் அசோகன்.



"வேட்பாளர்களின் செலவுக் கணக்குகளை எந்த அடிப்படையில் துல்லியமாக ஆராய்கிறார்கள்?" என இந்திய அரசின் முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் கோபாலசுவாமியிடம் கேட்டோம்.

"எல்லாவற்றுக்கும் சில வரையறைகளை வைத்துள்ளனர். ஒரு வாகனத்தை வாடகைக்கு எடுத்தால் எவ்வளவு தொகை, பேனர் வைத்தால் எவ்வளவு தொகை எனப் பட்டியலிட்டுள்ளனர். சந்தை நிலவரப்படி எவ்வளவு செலவாகும் என்பதை தோராயமாகக் கணக்கிடுகின்றனர். மூன்று நாளைக்கு ஒரு முறை தேர்தல் ஆணைய அதிகாரிகள் நிழல் அறிக்கை தயார் செய்கின்றனர். ஆணையத்தின் வரம்பிற்குட்பட்டுத்தான் வேட்பாளர்கள் செலவு செய்கிறார்களா என்றால், இல்லை என்றுதான் சொல்வேன். என்ன மாதிரியான தவறுகளை செய்கிறார்கள் என்பதைக் கண்டறிய முடியாது" என்கிறார்.

**உண்மைக் கணக்கு எங்கே?**

தொடர்ந்து விவரித்தவர், "ஒரு பிரியாணியை 150 ரூபாய்க்குக் கொடுத்துவிட்டு 300 ரூபாய் என்றுகூட எழுதலாம். அதனைக் கண்டறிய முடியாது. யாரும் முறையாகச் செலவு செய்வதில்லை. இது அனைவருக்குமே தெரிந்த விஷயம்தான். தேர்தல் ஆணையமும் எவ்வளவு விசாரிக்க முடியுமோ அதைத்தான் செய்ய முடியும். அவர்களால் எவ்வளவு பேரைத்தான் பிடிக்க முடியும். ஒரு சிலர் தவறு செய்தால் கண்டறியலாம். ஒட்டுமொத்தமாக தவறு செய்தால் என்ன செய்ய முடியும்? ஒரு சிலர் வேண்டுமானால் உண்மைக் கணக்கைக் காட்டலாம். தேர்தல் ஆணையம் ரூ. 260 கோடியை பறிமுதல் செய்கிறது என்றால், அந்தத் திகதியில் முறையான ஆவணங்கள் இல்லாததால் பிடிபட்டிருக்கலாம். சரியான கணக்கைக் காட்டினால் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். ஆவணத்தை உடனே கொண்டு வரவில்லை என்றால் தவறு செய்வதற்கு வாய்ப்புள்ளது. ஆனாலும், ஆவணத்தைக் காட்டி விட்டால் பணத்தைத் திருப்பிக் கொடுத்துத்தான் ஆக வேண்டும்" என்கிறார்.

**தமிழ்நாட்டுக்குப் பெருமையா?**

"ஆர்.கே.நகரில் பண விநியோகத்தின் பேரில் தேர்தல் ஆணையம் என்ன நடவடிக்கை எடுத்தது என ப.சிதம்பரம் கேள்வி எழுப்பியிருந்தாரே?" என்றோம்.

"அவரிடம் ஒன்றைக் கேளுங்கள். அவரும் அனுமதிக்கப்பட்ட அளவுக்குள் தான் செலவு செய்தாரா. அவரது மகனும் அதே அளவுதான் செலவு செய்தாரா? ஆர்.கே.நகர் தொகுதியைப் பொறுத்தவரையில் வேறு தொகுதிக்கு வாக்காளர்களை வரவழைத்துப் பணம் கொடுத்தார்கள். ஒரு தொகுதியில் தேர்தல் நடக்கிறது என்றால் வேறு தொகுதியில் வைத்துப் பணம் கொடுத்தால் என்ன செய்ய முடியும்? எத்தனை அதிகாரிகள்தான் கண்காணிக்க முடியும்? ஒரு தொகுதிக்குள் 2 அல்லது 3 செலவின பார்வையாளர்கள்தான் இருப்பார்கள். ஆனால், ஆர்.கே.நகரில் 247 பேரை போட்டார்கள். அதில் இருந்தே தமிழ்நாட்டின் பெருமை தெரியவில்லையா?

நாடாளுமன்ற தேர்தலின்போது வேலூரில் தி.மு.க வேட்பாளர் கதிர் ஆனந்த், குடோனில் பணம் வைத்திருந்ததாகத் தகவல் வெளியானது. எவ்வளவு குடோன்களை ஆணையத்தால் ஆய்வு செய்ய முடியும்?

மக்களும், "எங்கே பணம் கொடுக்கிறார்கள், எவ்வளவு கொடுக்கிறார்கள்?" என்றுதான் பார்க்கிறார்கள். கடந்த தேர்தலில் ரூ. 30 கோடி என சொத்துகளைக் காட்டியவர்கள், இப்போது ரூ. 60 கோடியை காட்டுகிறார்கள். அரசியல் வர்த்தகமாக மாறிவிட்ட பிறகு சொல்வதற்கு என்ன இருக்கிறது?" என்கிறார் வேதனைக் குரலில்.

பறக்கும் படை அதிகாரிகளின் தீவிர கண்காணிப்பும் வருமான வரித்துறை அதிகாரிகளின் தொடர் சோதனைகளும் பிரதானக் கட்சிகளை சற்று அச்சம் கொள்ளவே செய்துள்ளன. தேர்தல் திகதி நெருங்கிக் கொண்டிருப்பதால் கூகுள் பே, பேடிஎம் என இணைய வழி பரிவர்த்தனைகள் நடப்பதாகவும் புகார்கள் எழுந்துள்ளன. இதனால் தேர்தலை சிறப்பாக நடத்தி முடிப்பதை விட, பண விநியோகத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய பதற்றத்திலும் தேர்தல் ஆணையத்தின் அதிகாரிகள் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெனிவாவில் வெற்றி பெற்றது யார்?

தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கடந்த ஒரு மாத காலமாகக் களை கட்டிய ஜெனிவாத் திருவிழா, ஒருவாறு கடந்த செவ்வாய்கிழமை முடிவுக்கு வந்துவிட்டது. இதில் வெற்றியாளர்கள் யார் என்ற கேள்விக்கான பதிலை நாமறிவோம். அது, நிச்சயமாகத் தமிழர்களோ அரசாங்கமோ அல்ல!

ஆசியாவின் மீதான ஆவலின் விளைவால், உதித்துள்ள பூகோளஅரசியல் ஆட்டத்தின் ஒரு கட்டமே ஜெனீவாவில் அரங்கேறியது. வாக்குகள் எவ்வாறு அளிக்கப்பட்டன என்பதைப் பார்ப்பதன் மூலம், அதை இலகுவில் புரிந்துவிட முடியும்.

இலங்கை, இன்று பாரிய நெருக்கடிக்குள் இருக்கிறது. இதன் மோசமான விளைவுகளை இலங்கையர்கள் அனைவரும் எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக, பொருளாதாரச் சங்கிலியில் கீழ்நிலையில் உள்ளவர்கள், மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். சிங்களப் பெருந்தேசியவாத அகங்காரத்துக்கு, இராணுவமயமாக்கல் புதிய அதிகாரத்தையும் வலுவையும் வழங்கியுள்ளது. இதற்கு, 'ஒழுங்குபடுத்தப்பட்ட சமூகத்தின் அவசியம்' என்ற முகமூடி வெகுவாகப் பொருந்துகிறது.

இன்று, சிறுபான்மையினர் தொடர்ச்சியாகப் பலமுனைத் தாக்குதல்களை எதிர்கொள்கிறார்கள். சிறுபான்மையினருக்கு எதிரான மனநிலையையே அரசாங்கம் தனது 'சமூக மூலதனமாகக்' கொள்கிறது.

ஜெனிவாவில் நடந்தவை ஆச்சரியம் தருபவையோ எதிர்பாராதவையோ அல்ல. 'திருவிழா' தொடங்கி முடியும் வரையான காலத்தில், ஒரு நகைச்சுவையான சாகசப் படத்தைப் பார்க்கும் மனோநிலையே காணப்பட்டது.

திருவிழாவுக்கு முன்பு, அதைப் பற்றிய கனவுக் கோட்டைகளைக் கட்டியெழுப்புவதில் தமிழ்த் தேசியவாதிகளும் தமிழ் ஊடகங்களில் பலவும் போட்டியிடுவதும், பின்பு ஏமாற்றிவிட்டார்கள் என்று அழுது புலம்புவதும் நமக்குப் பழகிவிட்டது. ஒவ்வொரு வருடம், ஒவ்வொரு திருவிழாவுக்கும் முன்பு சொன்னவற்றை ஒப்பிட்டால், எல்லாமோரு சுவடியின் பிரதிகளாகத் தெரியும்.

ஜெனிவா திருவிழா, என்னவோ தமிழரின் அவலம் பற்றியது மட்டுமே என்ற மயக்கம் நம்மிடையே அதிகமிருக்கையில், அடிக்கடி எழுகிற ஒரு வினா, 'பொய்யென்று அறிந்தும் ஏன் அதே பொய்யை மீண்டும் மீண்டும் விரும்பிக் கேட்கிறோம்'?

கசக்கும் உண்மையை விட இனிக்கும் பொய் நம்மைக் கவர்கிறது என்பது ஒரு காரணம் உண்மைகளை விசாரித்தறியவும் விவாதிக்கவும் நமக்கு வாய்ப்புகள் குறைவு என்பது இன்னொரு காரணம். அத்துடன் பிற களங்களில் நிகழ்வன பற்றித் தேடியறிந்து, பிறரின் அனுபவங்களினின்று கற்கும் மரபு குறைவாகவுள்ளது.

சர்வதேச விசாரணை பற்றித் தமிழ் மக்களுக்கு உள்ள எதிர்பார்ப்பை,



**"ஜெனிவா திருவிழா, என்னவோ தமிழரின் அவலம் பற்றியது மட்டுமே என்ற மயக்கம் நம்மிடையே அதிகமிருக்கையில், அடிக்கடி எழுகிற ஒரு வினா, 'பொய்யென்று அறிந்தும் ஏன் அதே பொய்யை மீண்டும் மீண்டும் விரும்பிக் கேட்கிறோம்'?"**

தமிழீழ விடுதலை, சமஷ்டி ஆகியன பற்றி இருந்த நம்பிக்கைகளுடன் ஒப்பிடலாம். முந்திய இரண்டிலும், தமிழ் மக்கள் தமது எதிர்காலத்தைச் சில தலைமைகளிடம் ஒப்படைத்து அவற்றையே நம்பியிருந்தனர். அவை ஏன் தவறின என்பது பற்றி, இங்கு மீண்டும் பேசத் தேவையில்லை.

சர்வதேச விசாரணையைப் பொறுத்தவரை, அது, 'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொட்டிய' ஒரு வரம் மாதிரித் தெரிந்தது. நமக்குச் சாபங்களுக்கும் வரங்களுக்கும் வேறுபாடு தெரிவது குறைவு.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை, போர்க்குற்ற விசாரணை பற்றிப் பேச்செடுத்த நாள் முதல், இங்கும் தமிழர் புலம் பெயர்ந்த நாடுகளிலும் தமிழ்நாட்டிலும், சர்வதேசப் போர்க்குற்ற விசாரணையை விட்டால், போர்ப் பாதிப்புகளில் வேறெதனுடைய முக்கியத்துவமும் போய்விட்டதெனலாம்.

காணாமலாக்கப்பட்டோர் பற்றியும் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றியும் நில மீட்புப் பற்றியும் பாதிக்கப்பட்டோரின் எதிர்ப்புக் குரல்கள் எழும்வரை, எந்தத் தமிழ்த் தலைமையும் அவற்றை முன்வைத்துப் போராடவோ போராடுமாறு மக்களுக்கு வழிகாட்டவோ முன்வரவில்லை.

சர்வதேச சமூகம், தமிழ் மக்களைப் பற்றி அக்கறை காட்டுகிறது என்ற மயக்கம் இல்லாதிருந்தால், தமிழ் மக்களிடையே சர்வதேச சமூகமும் ஐ.நா சபையும் இந்தியாவும் பற்றிய பொய் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்ப தமிழ்த் தலைமைகள் முயன்றிரர் பொய் நம்பிக்கைகளைக் காட்டி, வாக்குச் சேகரிப்பில் இறங்க வாய்ப்பு இருந்திராது. வருடாந்தம் ஜெனீவாவுக்குத் தலயாத்திரை போய், வெட்டி விழுத்தப்போவதாக நாடகமாட இடமிருந்திராது. நல்ல வேளை, இந்தமுறை இந்த அபத்தக் கதைகளிலிருந்து கொவிட்-19 நோய் பரவுகை காப்பாற்றியது.

பேரினவாத அரசாங்கம் சர்வதேச விசாரணையை மட்டும் மறுக்கவில்லை. அது, எந்த நியாயமான விசாரணைகளையும் விரும்பவில்லை. அரச படைகளை மட்டுமே இலக்குவைத்து விசாரணைகளை வேண்டுவதாக அது கூறுகிறது. அதன் மூலம், சிங்கள மக்களிடையே போர்க்குற்ற விசாரணைகளுக்கு எதிரான எண்ணத்தை வளர்த்துள்ளது. அவர்களுடைய உபாயங்களை முறியடிக்கும் மாற்று உபாயங்களைத் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் வகுக்கவில்லை.

தமிழ்த் தேசியவாதம், உலக அரசியலையோ பிராந்திய அரசியலையோ விளங்கிச் செயற்படுவதாகச் சொல்ல இயலாது. கண்மூடித்தனமான மேற்குலக விசுவாசமும் இந்தியாவை அண்டிநிற்கும் போக்கும் தமிழ் மக்களின் நலன்கருதி விளைந்தன வல்ல. அதில் தமிழ்த் தேசியவாதத்தின், தலைமைகளின் முதலாளியச் சார்புக்கும் அதையொட்டிய ஐக்கிய தேசிய கட்சி அனுதாபத்துக்கும் ஒரு பங்குண்டு.

தமிழ் மக்கள் தொடர்ச்சியாகத் தேர்தல்களில் வாக்களித்து, பிரதிநிதிகளைத் தெரிந்து பாராளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளார்கள். தெரிவான பிரதிநிதிகள் மக்களை விடாது ஏய்த்து வந்துள்ளார்கள். ஆனாலும் நாமும் விடாது அதே பிரதிநிதிகளைத் தெரிகிறோம். அவர்களில் சிலரைப் பிடிக்காவிட்டால், நம்மை ஏமாற்றப் புதிய தலைகளைத் தெரிகிறோம். இந்த மனநிலையை என்னவென்பது?

ஒன்றில் கட்சியை மாற்றுவது அல்லது, ஆட்களை மாற்றுவது என்ற இரண்டு வழிகளிலேயே, தமிழ் மக்கள் தம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முனைப்புகளில் ஏற்படும் இடர்களைக் களைய முனைந்துள்ளார்கள். மாகாண மட்டத்தில் ஆட்சி அதிகாரத்தை உடைய வடமாகாண சபையாலோ தேசிய மட்டத்தில் எதிர்க்கட்சி அந்தஸ்தையும் பதவியையும் உடைய பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தாலோ எதுவும் இயலவில்லை. பத்தாண்டுகால ஜெனீவாத் திருவிழாவாலும் எதுவும் ஆகவில்லை.

வளரும் அந்நியக் கடன் சுமையிடையே தவறும் பொருளாதாரமும் தீர்க்காத தேசிய இனப்பிரச்சினையும் மோசமாவதன் பயனாக, சீரழியும் சமூக இணக்கமும் அமைதியும் அரசியல் வாதிகள் பலருக்கும் தொடர்புள்ள குற்றச் செயல்களிடையே சட்டமும் ஒழுங்கும் எதிர்நோக்கும் நெருக்கடியும் பொறுப்பற்ற நுகர்வால் சிதையும் சுற்றாடலும் சுயாதீனமான அயற் கொள்கையின் சிதைவால் நாட்டின் இறைமை எதிர்நோக்கும் சவால்களும் உட்பட, நாடு எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக் கொள்கையும் வேலைத்திட்டமும் இல்லாவிடத்து, இஸ்லாமிய பயங்கரவாதத்தினின்று நாட்டைக் காப்பாற்றுவது பற்றிய பேச்சுகளும் புலம்பெயர் தேசங்களில் வலுப்பெறும் விடுதலைப்புலிகள் என்ற பொய்களுமே இந்த அரசாங்கத்தின் பிரதான ஆயுதங்களாக உள்ளன. சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களே அரசாங்கம் தன்னை தொடர்ச்சியாகப் 'பாதிக்கப்பட்டோராகக்' காட்டிக் கொள்ள உதவுகிறது. இந்த அரசாங்கத்தின் ஆதரவுத் தளமும் அதுதான் என்பதை அது நன்கறியும்.

இலங்கை தொடர்பான தீர்மானம் பற்றிய கருத்தாடலில் உரையாற்றிய இலங்கைக்கான தூதுவர் சி.ஏ. சந்திர பிரேம 'இத்தீர்மானம் நிறைவேற்றப்படுமானால் அது இலங்கைச் சமூகத்தைத் துருவங்களாகப் பிரிப்பதோடு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி, சமாதானம் ஆகியவற்றில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.' என்று தெரிவித்துள்ளார். இவை மறைமுகமாகவும் நேரடியாகவும் இலங்கையின் செல்திசையை அடையாளங்



காட்டி நிற்கின்றன.

இன்று இலங்கையின் சிறுபான்மையினர் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றனர். ஒருபுறம் புதிய அரசியலமைப்புக்கான வேலைகள் நடக்கின்றன. சிறுபான்மையினரது அடையாளங்களும் நிலங்களும் தொடர்ந்து கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன.

ஜெனீவாவில் என்ன நடந்தாலும் அது சிறுபான்மையினர் எதிர்நோக்கும் சவால்களுக்குத் தீர்வாகாது. அதனிலும் மேலாக இலங்கையின் ஜனநாயகத்தைத் தக்கவைப்பதென்பதே பாரிய சவாலாக உள்ளது.

மூன்று விடயங்கள் உடனடியானவை. முதலாவது, நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்வின் அத்தியாவசியத் தேவைகள் தடையின்றிக் கிடைப்பதையும் வாழ்வாதாரங்கள் உள்ளமையையும் எவரதும் சுயமரியாதையான சமூகப் பயனுள்ள வாழ்வுக்கும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மக்களின் நலமான வாழ்வுக்குமாக அத்தியாவசியமான சேவைகளை உறுதி செய்தல்.

இரண்டாவது, பாதுகாப்புத் துறையின் பணிகளை முற்றிலும் நாட்டின் பாதுகாப்புடன் தொடர்பான அலுவல்கட்கு மட்டுப்படுத்துவதுடன் குடிசார் அலுவல்களிலும் அரசியலிலும் பாதுகாப்புத் துறை குறுக்கீட்டைத் நிறுத்துவதை உறுதி செய்தல்.

மூன்றாவது, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என உறுதிப்படுத்தலும் நீதிமன்றங்களின் பொறுப்பான நடத்தையையும் உறுதிசெய்தல்.

இவை சாதிக்க இலகுவானவையல்ல அதேவேளை இயலாதனவுமல்ல. இன்று இலங்கையர்கள் முன்னுள்ள சவால், இவை மூன்றையும் உறுதிப்படுத்துவதாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்


**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**28-A**

**2016 - 04**

இக் கேள்வியில் வளைகோடுகளினால் மாத்திரம் ஆன உருவினைத் தெரிவு செய்யும்படி கேட்கப்படடிருக்கிறது.

உரு 2 இல் வட்டத்தில் ஒரு கிடைக்கோடு உள்ளது.





உரு 3 இல் குறுக்காக அமைந்த இரு நேர்கோடுகள் உள்ளன .

உரு 1இல் எலும்புகள் இரண்டு குறுக்கிட்டது போல. முழு கட்டமைப்பும் வளைந்த கோடுகளினால் ஆனது.

.அதற்குரிய சரியான **விடை - 01**

**2017 - 03**

இக் கேள்வியில். ஒரு உரு ஏனைய இரு உருக்களிலும் இருந்து வேறுபடுகின்றது.




உரு 1இல் எல்லாமே முக்கோணங்களினால் ஆனது.

உரு 2 இல் நான்கும் சதுரங்கள்.


உரு 3இல் இரண்டு சதுரங்களும் இரண்டு முக்கோணங்களும் உள்ளன. இதில்தான் கலப்பு வடிவங்கள் உள்ளன.

எனவே சரியான **விடை - 03**

**2017 - 04**

இக் கேள்வியில். 3 வட்டங்கள் தரப்பட்டுள்ளன.இதில் வேறுபடும் உருவினைத் தெரிவு செய்யும்படி கேட்கப்படடிருக்கிறது.

உரு 2 இல் வட்டத்தில் வலஞ்சுழியாக கறுப்புப் பொட்டு வெள்ளைப்பொட்டு நட்சத்திரக் குறியீடு என ஒழுங்கில் உள்ளது.




உரு 3 இல் வட்டத்தில் வலஞ்சுழியாக கறுப்புப் பொட்டு வெள்ளைப்பொட்டு நட்சத்திரக் குறியீடு என ஒழுங்கில் உள்ளது.


உரு 1இல் முழு கட்டமைப்பும் வளைந்த வட்டத்தில் இடஞ்சுழியாக வெள்ளைப் பொட்டு கறுப்புப்பொட்டு நட்சத்திரக் குறியீடு என ஒழுங்கில் உள்ளது.

எனவே சரியான **விடை - 01**

**2019 - 03**

மரம் ஒன்றினை உரு A இலும் உரு B இலும் சிறிய வித்தியாசங்களுடன் வரையப்பட்டுள்ளது.இங்கு 3 வத்தியாசங்களைக் காணமுடியும்.


1) மர வரைகோடு பூர்த்தி செய்யப்படவி.ல்லை.



2) மர வரைகோடு மேலதிகமாக வெட்டடுக் கோடு உள்ளது. மற்றதில் இல்லை



1) மர அடிப்புற கோடு பூர்த்தி செய்யப்படவி.ல்லை.




எனவே சரியான **விடை - 03**

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஒரு வருடம் பிற்போடப்படும் நிலை

## அரசின் செயற்பாடே இதற்கு காரணம் என்கிறார் கிரியெல்ல



*கொழும்பு, மார்ச் 28*

அரசின் நடவடிக்கையால் மாகாண சபைகளுக்கான தேர்தலை மேலும் ஒரு வருடத்துக்கு பிற்போடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு முரணாக அரசு செயற்படும் நிலை ஏற்படுமென எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. எச்சரித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சி பிரதம கொற டாவான லக்ஷ்மன் கிரியெல்ல விசேட கூற்றொன்றை முன் வைத்து தெரிவுக்குழு விடயங்கள் குறித்து கேள்வி எழுப்பினார், இதன் போது “தேர்தல்கள் மற்றும் வாக்கு கண்காணிப்பு குறித்த சட்ட திட்டங் களில் மாற்றங்களை ஏற்படுத்தும் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதில் பொதுத்தேர்தல், மாகாணசபை தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகிய மூன்று தேர்தலும் தெரிவுக்குழுவில் விவாதத்திற்கு உட்படுத்தப்படுமா? எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன,எமது அரசு மக்களிடம் பெற்றுக்கொண்ட ஆணைக்கு அமையவும் நாம் கொடுத்த வாக்குறுதிக்கு அமையவும் சகல தேர்தல் சட்டதிட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை கலந்துரையாடலுக்கு உற்படுத்தப்படும். தெரிவுக்குழுவில் இது குறித்து ஆராயப்படும் என்றார்.

இதன்போது மீண்டும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய லக்ஷ்மன் கிரியெல்ல , அரசியலமைப்பை உருவாக்க சட்ட வல்லுநர்களுக்கு பொறுப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் தனித்து செயற்பட்டு வருகின்றனர். தேர்தல்கள் சட்ட முறைமைகளை ஆராய பிறிதொரு பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அரசியல் அமைப்பு உருவாக்கத்திற்கும், தேர்தல் முறைமையை ஆராயவும் ஒரே தெரிவுக்குழுவை நியமிப்பதே சிறந்தது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்த தெரிவுக்குழு நியமிக்கப்பட்டால் நாமும் அதில் பங்குபற்றுவோம். ஆனால் தற்போது நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணிகளை சந்தித்து இது குறித்து ஆராய நாம் தயாரில்லை. ஆகவே அரசியல் அமைப்பை உருவாக்கவும் தெரிவுக்குழு ஒன்றினை உருவாக்கக் கோரி சபாநாயகர் அரசுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். தேர்தல் சட்டங்களை உருவாக்கவும் அதே தெரிவுக்குழுவை பயன்படுத்தலாம் இல்லையேல் பிறிதொரு தெரிவுக்குழு நியமித்தாலும் தவறில்லை. அதை விடுத்து அனைத்து விடயங்களையும் ஒன்றாக்கி குழப்பிக்கொள்ள வேண்டாம் என்றார்.

சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன, வியாழக்கிழமை கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்த காரணிகளை கலந்தாலோசித்து இப்போது அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை நிறைவேற்ற இணக்கம் காணப்பட்டது. அனைத்து புதிய பாராளுமன்றத்திலும் இவ்வாறான தெரிவுக்குழுக்கள் சம்பிரதாயபூர்வமாக நியமிக்கப்பட்டு சட்ட திட்டங்களை ஆராய்வது வழக்கமானது. அவர் நினைப்பது போன்று இது அவசர அவசரமாக செய்யும் விடயம் அல்ல. இந்த தெரிவுக்குழுவில் சகல தரப்புகளையும் இணைத்துக்கொள்வோம். எனவே இதனை மாற்றியமைக்க முடியாது என்றார்.

மீண்டும் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய லக்ஷ்மன் கிரியெல்ல, அரசின் இந்த நடவடிக்கையால் மாகாணசபை தேர்தல் இன்னும் ஒரு வருடத்துக்கு பிற்போடப்படும். ஆகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மற்றும் இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு முரணாக அரசு செயற்படும் நிலைமை ஏற்படும் என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன,இந்த விடயம் குறித்து பல்வேறு கருத்துகள் இப்போது முன்வைக்கப்படுகின்றன . இது குறித்து நீங்கள் அபாய அறிவி ப்பு விடுக்க வேண்டிய அவசியமில்லை. உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் காரணமாகவே மாகாணசபை தேர்தல் நிறுத்தப்பட்டுள்ளது. எனவே இதிலிருந்து விடுபட்டு எவ்வாறு தேர்தலை நடத்துவது என்பது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது“ என்றார்.

# தாமரைப்பூ பறிக்கச்சென்ற ஆசிரியர் நீரில் மூழ்கிப் பலி

## வவுனியாவில் துயரச்சம்பவம்



*வவுனியா, மார்ச் 28*

வவுனியாவில் தாமரைப்பூ பறிக்கச் சென்ற ஆசிரியர் ஒருவர் வைரவ புளியங் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த ஆசிரியர், அந்தப் பகுதியிலுள்ள ஆலயத்தின் தேர்த் திருவிழாவுக்காக குளத்தில் தாமரைப்பூ பறிக்கச் சென்றுள்ளார்.

எனினும் நீண்ட நேரமாகியும் அவரைக் காணவில்லை என்பதால், அப் பகுதியில் ஒன்றுகூடிய பொதுமக்கள் தேடுதல் மேற்கொண்டதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து, நீண்ட நேர தேடுதலின் பின்னர் குறித்த ஆசிரியரின் சடலம் குளத்திலிருந்து பொதுமக்களால் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆசிரியரான 33 வயது பரந்தாமன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

இவர் இராணுவத்தின் கடேட் படைப் பிரிவின் கப்டன் தரத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக் கலவையுடன் மாகாணத் தேர்தல்

## நடத்த அரசு திட்டம்

கொழும்பு,மார்ச்.28

விகிதாசார பிரதிநிதித்துவம் மற்றும் கடந்த தேர்தல் முறை ஆகியவற்றின் கலவை யுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை கோரியுள்ளது. எவ்வாறாயினும், எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அதை ஆராய்ந்து பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க அதிக நேரம் கோரியதைத் தொடர்ந்து, உத்தேச சட்டத்துக்கான அமைச்சரவை அனுமதி ஒத்தி வைக்கப்பட்டது.

ஆகவே, சட்டரீதியான தடைகளைத் தீர்த்த பின்னர் மாகாண சபைகளுக்கான தேர்தலை தாமதமாக நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த அரசாங்கம் மாகாண சபைகளின் தேர்தல் சட்டத்தில் திருத்தம் வடிவில் ஒரு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியது.

குறித்த பரிந்துரையின்படி, விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் 50 சதவீத உறுப் பினர்களைத் தேர்ந்தெடுக்க கலப்பு முறையின் கீழும் மீதமுள்ளவை கடந்த முறையின் கீழும் இடம் பெறும்.

இருப்பினும், டிலிமிட்டேஷன் செயல் முறை ஒரு சட்ட பூர்வமான சிக்கலை கொண்டு வந்துள்ள நிலையில் தற்போதைய சட்டத்தின் அடிப்படையில் வாக்கெடுப்பை நடத்துவது சாத்தியமில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் குறித்த விடயத்தை திருத்துவதற்கும் புதிய சட்டத்தை கொண்டு வரவும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் கடந்த வாரம் ஒரு புதிய அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்தார்.

குறித்த அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம், 70 சதவீத உறுப்பினர்கள் கடந்த கால தேர்தல் முறையின் கீழும் தபால் மூல வாக்களிப்பு உட்பட மிகுதி நடவடிக்கையை விகிதாசார முறைப்படியும் நடத்த பரிந்துரைக் கப்பட்டது.

மாகாண சபைகளை அமைத்து அதன் மூலம் உள்ளூராட்சி நிர்வாகத்தை வலுப் படுத்த வேண்டும் என இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள ஐ.நா. தீர்மானம் கோரும் அதே வேளை அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தை அமுல்படுத்த இந்தியாவும் வலியுறுத்துகிறது.

இருப்பினும், சில ஆளும் கட்சி உறுப்பி னர்கள் 13 ஆவது திருத்தம் ஊடாக அதிகாரப் பகிர்வை வழங்கக் கூடாது எனக் கருத்து தெரிவித்து வருகின்றனர். (எ)



# ஜனாதிபதி கோட்டாபய உத்தரவு 40 தமிழக மீனவர்கள் விடுதலை

கொழும்பு, மார்ச் 28

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவிற்கமைய தமிழக மீனவர்கள் 40 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

நல்லிணக்க அடிப்படையில் இந்த 40 மீனவர்கள் மீதும் எவ்வித வழக்குகளும் தொடராமல் விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவிற்கமைய இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 40 பேரும் படகுடன் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள், நேற்று முன்தினம் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தை வந்தடைந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)

# அரசிடம் மிகமோசமான வெளிநாட்டுக்கொள்கை

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்



கொழும்பு, மார்ச் 28

மிகவும் சொற்பளவான நட்பு நாடுகளையே இலங்கை தாற்போது தக்கவைத்துள்ளது என்பதை அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட புதிய தீர்மானத்துக்கு எதிராக அளிக்கப்பட்ட வாக்குகள் வெளிப்படுத்தியுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மிக மோசமான பொருளாதாரக் கொள்கைகளிலிருந்து தற்போது மோசமான வெளிநாட்டுக் கொள்கைகளை நோக்கி அரசாங்கம் நகர்ந்திருக்கின்றது என்றும் சாடியுள்ளார்.

நல்லிணக்க செயன்முறையைப் பொறுத்தவரையில் கடந்தகாலச் சம்பவங்கள் தொடர்பான உண்மைகளைக் கண்டறிவதென்பது மிகவும் முக்கியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

இலங்கை அரசாங்கம் தற்போது ஒரு நெருக்கடியிலிருந்து மற்றுமொரு நெருக்கடிக்கு உட்பட்டிருக்கின்றது.

மிகமோசமான பொருளாதார நிர்வாகம், கொரோனாவை கட்டுப்படுத்துவதில் கையாளப்பட்ட மோசமான உத்திகள் ஆகியவற்றிலிருந்து இப்போது பேரழிவுதரும் வெளிநாட்டுக் கொள்கைகளை நோக்கி அரசாங்கம் நகர்ந்திருக்கின்றது.

போர் முடிவடைந்ததன் பின்னரான காலப்பகுதியில், இப்போதுதான் வெளிநாட்டுக் கொள்கை மிகவும் மோசமான மட்டத்தில் பேணப்படுகின்றது என்று கூறமுடியும்.

கடந்த 2009 ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போரின் போது இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் மாத்திரமன்றி கடந்த 16 மாத காலத்தில் நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைச் சரிசெய்வதற்கு அதிக முக்கியத்துவமளிக்கும் விதமாகவே புதிய பிரேரணை அமைந்துள்ளது.

கொள்கைகளை வகுப்பதற்கான பொறுப்பிற்குப் பொருத்தமற்ற நபர்களை நியமித்ததன் விளைவாக, கொள்கை அடிப்படையில் அரசாங்கம் தோல்வியைத் தழுவியுள்ளது.

வெளியுறவுக்கொள்கைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மூலமே இராஜதந்திர ரீதியான செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்நிலையில் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து பொருளாதார ரீதியில் ஏற்படக்கூடிய சவால்களையும் பாதகமான தாக்கங்களையும் எதிர்கொள்வதற்கும் அவற்றைக் குறைத்துக் கொள்வதற்கும் அவசியமான புதிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ)

# 8 இலட்சத்து 84 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு இலங்கையில் இதுவரை கொரோனா தடுப்பூசி

கொழும்பு, மார்ச் 28

இலங்கையில் இதுவரையில் 8 இலட்சத்து 84 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் 14 ஆயிரத்து 455 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டதாக கொரோனா தடுப்பூசி செலுத்தல் தொடர்பான சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் இதுவரையில் 8 இலட்சத்து 84 ஆயிரத்து 164 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவின் நாளாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பல பகுதிகளில் மழைக்கு வாய்ப்பு



கொழும்பு, மார்ச் 28

நாட்டின் பல பகுதிகளில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்வதற்கான சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்வதற்கான சாத்தியம் காணப்படுவதாக குறித்த திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதால், மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

# பைசர் நிறுவனத்துடனான பேச்சுவார்த்தைகள் வெற்றி

## அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச்.28

பைசர் - பயோஎன்டெக் நிறுவனத்திடமிருந்து கொரோனா தடுப் பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன என அரசாங்கம் அறிவித்துள்ளது.

70 டிகிரி உறைநிலையில் வைத் திருப்பதற்கான சேமிப்பு வசதிகள் இலங்கையிடம் இல்லை என்றும் இருப்பினும் உற்பத்தியாளர் அதற் கான தீர்வு வழங்கியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

குறித்த நிறுவனம் தயாரிக்கும் தடுப் பூசிகளை சுமார் ஒரு வாரம் சாதாரண உறைநிலையில் வைத்திருக்கமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, பைசர் - பயோஎன்டெக் நிறுவனத்திடமிருந்து விரைவில் இலங்கைக்கு தடுப்பூசிகளை இறக்கு மதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (எ)

# சித்திரை புத்தாண்டுக் காலப்பகுதியில் பெரியளவிலான ஒன்றுகூடலுக்கு தடை



கொழும்பு, மார்ச் 28

தமிழ் - சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் பெரியளவிலான ஒன்றுகூடலுக்குத் தடை விதிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இருப்பினும், விடுமுறை நாள்களில் பயணக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்த இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

குடும்பங்கள் ஒன்று கூடுவது தடைப்படும் என்பதனால் பயணக் கட்டுப்பாடுகள் குறித்து அரசாங்கம் பரிசீலிக்கவில்லை எனக் குறிப்பிட்ட அவர், இருப்பினும் புத்தாண்டுக்கு முன்னதாக பொலிஸார், சுகாதார அதிகாரிகள் உரிய வழிகாட்டுதல்களை வழங்குவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், குறித்த நாள்களில் தற்போதுள்ள சுகாதார வழிகாட்டுதல்களைப் பொதுமக்கள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய பாதையில் அபூர்வ விபத்து!

# புயலில் சிக்கிய ராட்சதக் கப்பல் பக்கவாட்டில் திரும்பித் தரைதட்டி சூயஸ் கால்வாயை முடக்கியது!!

**குமாரதாஸன்**
பாரிஸ்.



பிரான்ஸின் துளுசில் உள்ள CNES - Airbus விண்வெளி ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய் மதிப் படத்தையே அருகில் காண்கின்றீர்கள்.




படத்தில் தெரிகின்ற பாரிய சரக்குக் கப்பல் (mega-container ship) சூயஸ் காலவாய்க்குக் குறுக்கே - இடக்கு முடக்காக - கரைகளுக்கு இடையே சிக்கிக் கொண்டு கால்வாயை மூடி கடற் போக்குவரத்தை அடைத்தபடி நிற்கின்றது.

இதனால் உலகின் படு பிஸியான ஒடுங்கிய கடல் வழி தடுக்கப்பட்டிருப்பது சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை உலுக்கி விட்டிருக்கிறது.

வீதியின் நடுவே விபத்து நடந்தால் வாகனங்கள் இருபுறமும் தடைப்பட்டு நிரையாக நிற்பது போல் 120 மைல் நீளமான கால்வாயைக் கடப்பதற்காக 206 கப்பல்கள் வரை இருபக்கமும் காத்து நிற்கின்றன. அவற்றில் 41 பாரிய கப்பல்களும் 21 மசகு எண்ணெய்த் தாங்கிகளும் அடங்கும்.சில கப்பல்கள் திசை திருப்பி விடப்பட்டு நடுக்கடலில் நக்கூரமிட்டுள்ளன.

உலக கப்பல் போக்குவரத்து மார்க்கத்தின் மிக முக்கிய கேந்திரமான சூயஸ் கால்வாய் தடைப்பட்டிருப்பது பல பில்லியன் டொலர்கள் வர்த்தகத்தை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் முடக்கி உள்ளது. உலக சந்தையில் எரிபொருள் விலைகள் எகிறி உள்ளன.

**கப்பலுக்கு என்ன நடந்தது?**

பனாமா நாட்டில் பதிவு செய்யப்பட்ட 'எவர் கிவ்வின்' (Ever Given) என்ற பெயர் கொண்ட கப்பலே இவ்வாறு சிக்கி உள்ளது. நான்கு உதைபந்தாட்டத் திடல்களின் மொத்தப் பரப்பைக் கொண்ட உலகின் மிகப் பெரிய கொள் கலன் கப்பல்களில் ஒன்று அது. ஜப்பானிய உரிமையாளர் ஒருவருக்குச் சொந்தமானது. தாய்வானின் 'எவகிறீன் மரைன்' (Evergreen Marine) நிறுவனத்தால் இயக்கப்படுகிறது. 20 மாடிக் கட்டடத்தின் உயரத்தை ஒத்த 400 மீற்றர்கள் (1400 அடி) நீளமும் 59 மீற்றர் அகலமும் கொண்டது.

200 ஆயிரம் தொன் நிறையுடைய அக்கப்பலில் 20 ஆயிரம் பாரிய கொள் கலன்கள் ஏற்றப்பட்டுள்ளன.

சீனாவில் இருந்து நெதர்லாந்தின் றொட்டடாம் (Rotterdam) துறைமுகத்துக்குச் சென்றுகொண்டிருந்த வழியில் அது செங்கடல் ஊடாக எகிப்து நாட்டின் சூயஸ் கால்வாயில் நுழைந்த சமயம் கடும் புயல் காற்றில் சிக்கியது என்று கூறப்படுகிறது. மணல் புளுதியுடன் கூடிய புயல் காற்று அந்த ராட்சதக் கப்பலின் கட்டுப்பாட்டை மாலுமியிடம் இருந்து பறித்தெடுத்துவிட்டது.

புயலின் வேகம் 200 ஆயிரம் தொன் எடை கொண்ட கப்பலை நிலைகுலையச் செய்து பயண வழிக்குக் கிடையாக - கால்வாய்க்குக் குறுக்கே - திருப்பி விட்டுள்ளது. கப்பலின் முன்னும் பின்னுமான இரு புறங்களும் கால் வாயின் இரு பக்க மணல் கரைகளோடும் தரை தட்டியதால் இடக்கு முடக்காக நடுவில் இறுக்குப்பட்டு நிற்கிறது கப்பல்.

கப்டன் உட்பட இருபது மாலுமிகளும் பாதுகாப்பாக வெளியேறி உள்ளனர். கப்பலுக்கு சேதங்களோ எண்ணெய்க் கசிவுகளோ இன்னும் ஏற்படவில்லை.

**கப்பலை மீட்க முடியுமா?**

பொறிக்குள் சிக்கியது போலக் காணப் படுகின்ற அந்தக் கப்பலை மீட்டெடுத்து மீண்டும் அதன் பயண வழிக்குத் திருப்பு கின்ற பகீரத முயற்சிகள் பெருமெடுப்பில் தொடங்கப்பட்டுள்ளன.

அதன் பாரிய எடை காரணமாக மீட்பு முயற்சி இலகுவானது அல்ல என்று நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர். அதற்கு நாட்கள், வாரங்கள் ஆகலாம் என்று மதிப்பிடப்படுகிறது. கப்பலின் சுமையைக் குறைத்தால் மட்டுமே அதனை நகர்த்த முடியும் என்ற நிலை. எனவே முதலில் அதிலிருந்து கொள்கலன்கள் வேறு சிறிய படகுகளுக்கு இறக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அது இலகுவானதல்ல. வெற்றியளிக்கும் அறிகுறி தெரியவில்லை.

கப்பலின் முன், பின் பகுதிகள் கால் வாயின் கரையோர மண்ணில் பொறுத்துப்போய் நிற்பதால் பாரிய இயந்திரங்களின் உதவியோடு மண்ணை அகழ்ந்து கரைப்பகுதிகளை அகலப்படுத்தும் வேலைகளும் முழு மூச்சில் இரவு பகலாக நடைபெறுகின்றன. சேதம் இன்றிக் கப்பலை நகர்ந்துவதற்கு கால்வாய்க் கரைகளை அகழ்ந்து ஆழமாக்குவதே ஒரே வழி என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

எகிப்தின் கோரிக்கையை அடுத்து நெதர்லாந்தைத் தளமாகக் கொண்ட Royal Boskalis என்ற நிறுவனம் தனது நிபுணர்கள், இயந்திரங்கள் சகிதம் கப்பலை மீட்கும் அணியில் இணைந்து கொண் டுள்ளது.
கடற்போக்குவரத்து
மற்றும்
கடற்கட்டுமானங்கள்,
பராமரிப்பு தொடர்பான
சேவைகளை சர்வதேச ரீதியில்
வழங்கிவருகின்ற பெரிய,
நிபுணத்துவம் வாய்ந்த
நிறுவனம் Royal Boskalis ஆகும்.

எகிப்து நாட்டில் சூயஸ் கால்வாய் (Suez Canal) மாபெரும் மனித உழைப்பினால் 1869 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது. மத்திய தரைக்கடலை யும் செங் கடலையும் இணைக்கின்ற அது ஆபிரிக்

காவை ஆசியா மற்றும் மத்திய கிழக்கு வட்டகைகளில் இருந்து பிரிக்கின்றது.

சூயஸ் கால்வாய் இதுபோன்ற ஒரு கப்பல் விபத்தால் துண்டிக்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.இதற்கு முன்பு போர்கள், போர் பதற்றங்கள் காரணமாக கால்வாய் மூடப்பட்ட துண்டு.

உலகளாவிய வர்த்தக நடவடிக்கைகளில் 12 சத வீதம் சூயஸ் கால்வாயில் தங்கி இருக்கிறது. அதில் எரிபொருள் முக்கிய மானது. மனித முயற்சியால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் வெட்டப்பட்ட அந்தக் கால்வாயூடான கடற் போக்குவரத்து தடைப்படுவது நாளொன்றுக்கு 9.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வர்த்தகப் பொருள்களை முடக்குகின்றது எனக் கப்பல் போக்கு வரத்துத் தரவுகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே கொரோனா வைரஸ் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற சர்வதேச கடல் வர்த்தக நடவடிக்கைகளை சூயஸ் கால்வாயின் இந்த முடக்கம் மேலும் தாக்கியுள்ளது என்று பொருளாதார நிபுணர்கள் கூறியிருக்கின்றனர்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 வருட காலமாக நிராகரித்த தீர்வை திணிப்பதில் ஐ.நா., இந்தியா முனைப்பு

## குற்றஞ்சாட்டுகின்றது தமிழ் சிவில் அமையம்

"ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை குறித்த மையக்குழுவும் இந்தியாவும் தமிழ் மக்களும் அவர்களது பிரதிநிதிகளும் கடந்த 35 வருடங்களாக நிராகரித்தவந்துள்ள ஒரு அரசியல் தீர்வைத் திணிப்பதில் முனைப்புக் காட்டுகின்றன" எனக் குற்றஞ்சாட்டியிருக்கின்றது தமிழ் சிவில் சமூக அமையம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46 வது அமர்வில் இலங்கை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டை அமையம் முன்வைத்திருக்கின்றது.

அமையத்தின் இணைப் பேச்சாளர்களான அருட் பணி வீ. யோகேஸ்வரன், பொ. ந. சிங்கம் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள இது குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"இலங்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக் கத்தை மேம்படுத்துவது தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றிய தீர்மானம் 46/1 ஐ தமிழ் சிவில் சமூக அமையம் கவனத்தில் கொள்கிறது. கடந்த 12 ஆண்டுகளில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றிய இலங்கை குறித்த எட்டாவது தீர்மானம் இதுவாகும். இத்தீர்மானமானது பொறுப்புக் கூறலை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவில் பங்களிக்காது என நாம் கருதுகிறோம்.

தீர்மானத்தைக் கொண்டு வந்த ஐக்கிய இராச்சியம் தலைமையிலான மையக்குழுவிற்கு 2021 மார்ச் 01 ஆந்திகதிய எமது கடிதத்தில் விளக்கப்பட்டுள்ளது போல், நீதிக்கான தமிழ் மக்களது போராட்டத்தை தாமதிப்பதற்கானதும் இருட்டடிப்புச் செய்வதற்குமான இன்னொரு முயற்சியே இத்தீர்மானம் ஆகும். மேலும் இது தமிழ் மக்களுக்கு எதிராக தற்போதும் இடம் பெறுகின்ற அத்துமீறல்களை, தடுப்பதில் அல்லது கட்டுப் படுத்துவதில் எவ்வித கரிசனையையும் காட்டவில்லை. தற்போதைய அரசாங்கமானது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மீதான வலிந்த கூட்டு அடையாள அழிப்புச் செயற்பாட்டை அதிகரித்து வருகின்றது. அடுத்தடுத்து வரும் இலங்கை அரசாங்கங்களின் கொள்கையானது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையேயன்றி வேறல்ல என்று தமிழ் மக்கள் கருதுகின்றனர். இத்தீர்மானமானது நிலைமையின் பாரதூரமான தன்மையை புரிந்து கொள்ளவுமில்லை. இனப்படுகொலையைத் தடுப்பதற்கான வழிவகைகளை முன் வைக்கவுமில்லை.

இத் தீர்மானமானது, சான்றுகளை சேகரிப்பதற்கான ஆணையை மனித உரிமை ஆணையாளருக்கு வழங்கு வதன் மூலம் வெளித் தோற்றத்தில் வலுவான பிரே ரணை போன்று தோற்றமளிக்கப் பட்டுள்ளது. எமது முன்னைய கடிதத்தில் நாம் சுட்டிக் காட்டியது போல், எத்தகைய நீதிப் பொறிமுறைக்கு அத்தகைய சாட்சித் திரட்டல் பங்களிப்புச் செய்யப் போகின்றது என்பது தொடர்பிலான விளக்கம் இல்லாத போது சான்றுகளை சேகரித்தல், ஒன்று சேர்த்தல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றிற்கான நோக்கம் பொருளற்றுப் போய்விடும். பொறுப்புக்கூறலை சாத்தியப்படுத்த சர்வதேச நியாயா திக்க வழிமுறையைப் பயன்படுத்துவதை மையக்குழு உட்பட உறுப்பு நாடுகள் விரும்புகின்றனவா என்பது கூட தெளிவாக இல்லை. இலங்கை விடயத்தை ஐநா பாதுகாப்புச் சபையில் எடுப்பதற்கான கோரிக்கை தொடர்பில் மையக் குழு தொடர்நது மௌனமாக உள்ளது. ஆணையாளரின் அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள அனைத்துப் பரிமாணங்களையும் மையக்குழுவில் அங்கம் வகிக்கும் அரசுகள் ஏற்றுக் கொள்கின்றதா என்ற னேய்வி எழுகின்றது. உண்மையான அர்ப்பணிப்பு மற்றும் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான அரசியல் விருப்பு மையக் குழுவில் அங்கம் வகிக்கும் அரசுகளுக்கு இல்லை என்றே நாம் கருதுகின்றோம்.

ஆரசியல் தீர்வு தொடர்பில் குறிப்பிடுகையில் தீர்மானத்தில் '13ஆம் திருத்தத்தை நிறைவேற்றல்' மற்றும் 'உள்ளூராட்சி' என்று மட்டுப்படுத்தப் பட்டுள்ளமையால் நாம் பெரிதும் விசனமடைகின்றோம். தீர்மானத்தின் இப்பந்தியானது இந்திய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் சேர்க்கப்பட்டது என நாம் அறிகின்றோம். இலங்கை தொடர்பாகத் தனது நலன்களைப் பாதுகாப்பதற்கும் தக்க வைப்பதற்கும் 13ம் திருத்தமும் அதனோடு தொடர்பு பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தமும் முக்கிய மானது என்ற விளங்கிக்கொள்ளலில் இந்தியா வெறுமனே தன் சுயநலனால் உந்தப்பட்டு இதனை சேர்ப்பித் துள்ளது. ஆனால், சுய நிர்ணய உரிமைக்கான எமது கோரிக்கையை 'உள்ளூராட்சி' என்பதாக உரைத்தல் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடல்ல என்பதைத் தெளிவாகப் அனைத்துத் தரப்புக்களும் புரிந்து கொள்ள வேண்டும். நாம் மறுபடி, மறுபடி குறிப்பிட்டு வந்திருப்பது போல், இறுக்கமான ஒற்றையாட்சி சட்டகத்தினுள் உள்ளடங்கியிருக்கும் 13ஆம் திருத்தச் சட்டமானது அரசியல் தீர்வொன்றின் ஆரம்பப்புள்ளியாகக்கூட அமையாது. மையக்குழுவும் இந்தியாவும் தமிழ் மக்களும் அவர்களது பிரதிநிதிகளும் கடந்த 35 வருடங்களாக நிராகரித்துவந்துள்ள ஒரு அரசியல் தீர்வைத் திணிப்பதில் முனைப்புக் காட்டகின்றன.

இத் தீர்மானமானது, வரலாற்றில் பொறுப்புக்கூற லைக் கையாள்வதில் அரை மனதுடன் செய்யப்பட்ட மற்றுமொரு முயற்சியென பதியப்படும். உண்மையில் இது தமிழ் மக்களுக்கு நீதி தொடர்பான பொய்யான நம்பிக்கையையும் எதிர்பார்ப்புகளையும் வழங்குவதில் மற்றொரு முயற்சி என நாம் அஞ்சுகின்றோம்.

இத்தீர்மானமானது சரியான திசையிலான ஒரு அடி என்பதாகவும் அது இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவதற்கான கோரிக் கையை மறைமுகமாக ஆதரிக்கின்றது என்பதாகவும் பரிந்துரைக்கின்ற தமிழ் செயற்பாட்டாளர்களால் நாம் ஏமாற்றம் அடைந்துள்ளோம். நாம் அனைத்து தமிழ் செயற்பாட்டாளர்களையும் தமிழ் மக்களுடனான தமது தொடர்பாடல்களில் வெளிப்படைத் தன்மையுடனும் நேர்மையுடனும் உண்மையாகவும் இருக்குமாறும் எம்மை நிரந்தரமான விரக்திக்குள்ளும் நம்பிக்கையின்மைக்குள்ளும் தள்ளவேண்டாம் எனவும் கேட்டுக்கொள் கின்றோம்.

தமிழ் மக்கள் தற்போதாவது ஜெனிவாவுக்காகக் காத்திருப்பது பயனற்றது என்பதை அறிந்திருப்பர். எமது கூட்டு வலியைக் கருவியாக்குகின்ற நிகழ்ச்சி நிரல்களை நாம் மறுதலிக்க வேண்டும். முன்னால் உள்ள ஒரே வழி புதிய சிந்தனைகளுக்கானதும் புதிய போராட்ட முறைகளுக்கானதும் ஆகும்.




# உயிர்த்த ஞாயிறு ஆணைக்குழு அறிக்கையில் தகவல்கள் வேண்டும் என்றே மறைக்கப்பட்டன!

## அனுரகுமார திஸநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 28

ஆணைக்குழு அறிக்கை ஒரு சந்தர்ப்பவாத அறிக்கையாக மாறியுள்ளது. இது உண்மைகள் கொலை செய்யப்பட்டுள்ளன மேலும் சில விடயங்கள் அதில் திரிவுபடுத்தப்பட்டுள்ளன. அறிக்கை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன என பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான மூன்று நாள் விவாதம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முஸ்லிம் சமூகம் தீவிரவாதங்களுக்கு இலக்காவது இரகசியமான விடயமல்ல. அவை தொடர்பில் அதிகமான தகவல்கள் தெரிந்திருக்க வேண்டும். அவர்களின் தலைவர்கள் குறித்த தீவிரவாதத்தை தோற்கடிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது மிகவும் கவலையான விடையம்.

சஹ்ரான் வெளிப்படையான ஒரு பயங்கரவாதி. அவர் தனது பேஸ்புக் கணக்கில் பல்வேறு பதிவுகளை இட்டிருந்தார். அவற்றை கணக்கில் எடுக்காது சுதந்திரமாக நடக்க அனுமதிப்பதற்கும், ஒரு தாக்குதல் வரை கொண்டு செல்வதற்கும், அதைத் தடுக்காமல் இருந்தமைக்கு முந்தைய அரசாங்கம் முழுமையாக பொறுப்பை ஏற்கவேண்டும்.

கடந்த ஆட்சியாளர்களால் இந்த பொறுப்பிலிருந்து தப்ப முடியாது. இந்த தாக்குதல் தொடர்பில் பல நபர்கள் பின்னே இருக்கின்றார்கள் பல தகவல்கள் அது தொடர்பில் உள்ளன.

தாக்குதல் நடத்தப்பட்டு சில தினங்களுக்கு பின்னர் சஹ்ரானின் ஆசிரியரான நௌபார் மௌலவி தம்புள்ளை பகுதியில் இருந்து கைது செயப்பட்டார். அவரிடம் இருந்து பொலிஸார் வெறுமனே வாக்குமூலம் ஒன்றினை மாத்திரம் பெற்றனர். ஆனால் அவரை ஜனாபதிபதி ஆணைக்குழுவிற்கு அழைத்து விசாரணைகளும் நடத்தப்படவில்லை.

ஒரு அறிக்கை தயாரிப்பதாயின் அது தொடர்பில் அனைத்து விடயங்களும் பரிசீலனை செய்யப்பட்டு முழுமையாக நாட்டு மக்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அப்போதுதான் சரியான தகவல்கள் மக்களுக்கு கிடைக்கும்-என்றார்.

# பொறுப்புக்கூறலுக்கு உதவ தயார் நிலையில் பிரிட்டன்!

## அந்நாட்டு அமைச்சர் தெரிவிப்பு

லண்டன், மார்ச் 28

இலங்கையில் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் குறித்து அர்த்தமுள்ள முன்னேற்றத்தை அடைவதற்கான முயற்சிகளுக்கு பிரிட்டன் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளது.

இந்த விடயத்தில் ஆக்கபூர்வமாக ஈடுபட தயாராக இருப்பதாக பிரிட்டன் வெளிவிவகார அலுவலக இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹமட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை மீதான தீர்மானத்தை வரவேற்கிறேன். இது மோதலுக்கு பிந்தைய நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டைக் குறிக்கிறது.

கடந்த காலத்தின் கடுமையான மனித உரிமை மீறல்கள் இலங்கையில் மீளவும் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாக எச்சரித்த ஆணையாளரின் அறிக்கைக்கும் இது பதிலளிக்கிறது.



எனவே ஐ.நா. தனது கண்காணிப்பைத் தொடர வேண்டும். அத்துடன், எதிர்கால பொறுப்புக்கூறல் செயல்முறைகளை ஆதரிப்பதற்கான ஆதாரங்களை சேகரிக்க வேண்டும் என்பது சரியானது-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசம் தலையிடக்கூடாது என்று இலங்கை ஒருபோதும் கூறமுடியாது

## அரசுக்கு திஸ்ஸ விதாரண ஆலோசனை

கொழும்பு, மார்ச் 28

**இலங்கையின் உள்விவகாரங்களில் சர்வதேசம் தலையிட முடியாது என்று ஒருபோதும் குறிப்பிட முடியாது. ஏனெனில், இலங்கை ஜனநாயகக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சர்வதேசத்துடன் ஒன்றிணைந்துள்ளது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**



இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையின் இராஜதந்திர உறவும், இலங்கை மீது சர்வதேசம் கொண்டுள்ள பார்வை குறித்தும் அதிகம் ஆராய நேரிட்டுள்ளது.

இலங்கைக்கு ஆதரவாக 11 நாடுகள் மாத்திரமே வாக்களித்துள்ளன. கடந்த காலங்களில் இலங்கைக்கு ஆதரவாகச் செயல்பட்ட ஆசிய நாடுகள் நடுநிலை வகித்துள்ளன. இவற்றில் இந்தியா, ஜப்பான் ஆகிய நட்பு நாடுகளைப் பிரதானமாகக் குறிப்பிட வேண்டும்.

நடுநிலை வகித்த நாடுகள் இலங்கைக்குச் சார்பாகச் செயல்பட்டுள்ளன எனக் கருத முடியாது. 14 நாடுகள் இலங்கை விவகாரம் தமக்குத் தேவையற்றது என ஒதுங்கியுள்ளன.

இவ்விடயம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஜெனிவா விவகாரத்தில் அரசாங்கம் சற்று வினைத்திறனான முறையில் செயல்பட்டிருக்கலாம் என்று தற்போது கருதப்படுகின்றது.

சர்வதேச நாடுகளுக்கு அடிபணிய முடியாது எனப் பேச்சளவில் மாத்திரமே குறிப்பிட முடியும். இலங்கையின் ஒரு சில உள்ளக விவகாரங்களில் சர்வதேசம் கவனம் செலுத்தும், இலங்கை ஜனநாயக கோட்பாட்டை முன்வைத்து சர்வதேசத்துடன் ஒன்றிணைந்துள்ளது. ஆகவே, ஜனநாயக விவகாரங்கள் குறித்து சர்வதேசம் கேள்வி எழுப்பும்.

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவது குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

ஜெனிவாவில் மாகாண சபைத் தேர்தல் குறித்து அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டுள்ளமைக்கு கடந்த அரசாங்கத்தில் இரு அரசதலைவர்களும் பொறுப்பு கூறவேண்டும்.

இனப்பிரச்னைக்குத் தீர்வு வழங்குவது கட்டாயமானது. இதனையே சர்வதேசமும் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்துகின்றது.

இலங்கையின் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இனப்பிரச்னைக்குத் தீர்வு வழங்க முடியும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள சர்வகட்சித்தலைவர் குழு அறிக்கையில் இதற்கான பொறிமுறைகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

சர்வகட்சித் தலைவர் குழு அறிக்கையைச் செயல்படுத்தியிருந்தால் பல பிரச்னைகளுக்கு இன்று தீர்வு கிடைக்கப் பெற்றிருக்கும்- என்றார். (எ)

# இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கு ஐரோப்பாவில் தடைவர வாய்ப்பு

## ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 28

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிவர்த்தி செய்ய ஒரு வருடம் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் இலங்கை முறையான பாதையில் பயணிக்காவிட்டால் மீண்டும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை அற்றுப் போகும் அதேவேளை, இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கு ஐரோப்பிய நாடுகள் தடை விதிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் உள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன எச்சரித்துள்ளார்.

இம்முறை இலங்கை தொடர்பான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த பிரான்ஸ் மற்றும் ஜெர்மன்உள்ளிட்ட நாடுகளின்ஆதரவை தனது ஆட்சியின் போது பெற்றுக்கொள்வதற்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறந்த இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுத்திருந்ததாகவும் வஜிர சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அவரது இல்லத்தில் இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே வஜிர மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் நிர்ணய விலையில் அரிசி

## அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்.28



ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் சதொச மொத்த விற்பனை கூட்டுறவு நிலையங்கள், பிரதான விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் ஊடாக சிவப்பு மற்றும் வெள்ளை அரிசி ஒரு கிலோவை 95 ரூபாய்க்கும், நாட்டரிசி ஒரு கிலோவை 97 ரூபாய்க்கும் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் போதுமான அளவுக்கு அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

சதொச தலைவர், மொத்த கூட்டுறவு விற்பனை நிறுவன ஆணையாளர், பிரதான விற்பனை நிலையங்களின் பிரதானிகள் ஆகியோருடன் விவசாயத்துறை அமைச்சில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அரிசியின் நிர்ணய விலையைப் பேணுவது சவால்மிக்கதாக உள்ளது. அரிசியின் விற்பனை விலை தொடர்பில் அரசாங்கம் வர்த்தமானி வெளியிட்டாலும் அவற்றை முறையாகப் பின்பற்ற முடியாத தன்மை காணப்படுகிறது.

கடந்த காலங்களில் அரிசி உற்பத்தியாளர்கள் முறையற்ற வகையில் செயல்பட்டதன் காரணமாக அரிசி விற்பனை விலையில் மாறுபட்ட தன்மை ஏற்பட்டது. பண்டிகைக் காலத்தில் அத்தியாவசிய பொருள்களின் விலை குறைப்பு ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார். இதன் முதற்கட்டமாக அரிசி விலையின் நிர்ணயத் தன்மையை உறுதியாகப் பேண தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (எ)

# சாராவை இலங்கைக்கு அழைத்துவர அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## முஜிபுர் ரஹ்மான் கேள்வி

கொழும்பு, மார்ச் 28

நாட்டில் ஒரு சட்டம் என்றால் இந்தியப் பிரஜைக்கு ஒரு சட்டமும் அஸாத் சாலிக்கு வேறு சட்டமும் இருக்க முடியாது. அத்துடன் உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளில் ஒருவரான சாராவை இலங்கைக்கு அழைத்துவர இந்திய அரசாங்கத்திடம் இதுவரை ஏன் எவ்வித கோரிக்கையையும் அரசாங்கம் முன்வைக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில்:

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தாக்குதல்கள் இடம்பெறுவதற்கு முன்னர்கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல்கள், தாக்குதல்கள் நடத்தப்பட்டவிதம், திட்டமிடப்பட்டமை மற்றும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பிலான நபர்கள் குறித்து ஒருபுறம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும் ஆணைக்குழுவின் அறிக்கையின் மூலம் சஹ்ரானின் பின்புலம், அவருக்கு உதவிகளை செய்தவர்கள் மற்றும் அவரை வழிநடத்தியவர்கள் யாரென அனைவரும் எதிர்பார்த்திருந்தோம். ஆனால், ஆணைக்குழுவின் அறிக்கையில் அவ்வாறான தகவல்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

என்றாலும் ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில விடயங்களை தொடர்புபடுத்துவதன் மூலம் சில தெளிவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆணைக்குழுவின் அறிக்கையில் 251 ஆவது பக்கத்தில் சாய்ந்தமருதில் குண்டு வெடிப்பு இடம்பெற்றமை தொடர்பில் சாட்சிமளித்துள்ள சஹ்ரானின் மனைவி, குறித்த குண்டு வெடிப்பு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் சாராவின் குரல் தனக்குக் கேட்டதாகவும் அவர் உயிருடன் உள்ளார் எனவும் கூறியுள்ளார்.



ஆணைக்குழுவின் அறிக்கையிலும் சாராவின் தாயின் டி.என்.ஏ பரிசோதனையின் பிரகாரம் சாரா உயிருடன் உள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறெனின் குண்டுவெடிப்பு இடம்பெற்ற சாய்ந்தமருதிலிருந்து சாரா இந்தியாவுக்கு தப்பிச்செல்லும் வரை அவருக்கு உதவிபுரிந்தது யாரென்ற பிரச்னை எமக்குள்ளது. இதுதொடர்பாகவும் விசாரணை இடம்பெறவேண்டும்- என்றார். (எ)

# 2019 - 2020இல் ரூ.49 கோடி செலவு செய்தும் யானை - மனித மோதல் குறையவில்லை

கொழும்பு, மார்ச் 28

2019 மற்றும் 2020ஆம் ஆண்டு காலப் பகுதியில் 49 கோடி ரூபா செலவுசெய்யப்பட்டபோதும் யானை - மனித மோதல் குறையவில்லை என்று பாராளுமன்றத் தில் இடம்பெற்ற அரசாங்கக்கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) புலப்பட்டது.

யானை - மனித மோதலைத் தவிர்ப்பதற்கு 2019ஆம் ஆண்டு மின்சார வேலிகளை அமைக்க 27 கோடியே 54 இலட்சத்து 47,639 ரூபாசெலவுசெய்யப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் 22 கோடியே 15 இலட்சத்து 5,818 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

இத்தொகையைப் பயன் படுத்தி 4,756 கிலோ மீற்றர் தூரத்துக்கு மின்சாரவேலி அமைக் கப்பட்டுள்ளது.

இருந்தபோதும் 2021ஆம் ஆண்டு மார்ச்23 ஆம் திகதி வரையில் இலங்கையில் யானை - மனித மோதல் காரணமாக 28 மனிதர்களும், 83 யானைகளும் உயிரிழந்திருப்பதாக இக்குழு வில் புலப்பட்டது.

அரசாங்கக் கணக்குகள் பற் றிய குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான, லசந்த அழகியவண்ண, தயாசிறி ஜெயசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, மொஹமட் முஸம்மில், ஜகத் புஷ்பகுமார, பீ.வை.ஜீ. ரத்ன சேகர, வைத்தியகலாநிதி உபுல் கலப்பதி, கலாநிதி ஹரினி அமர சூரிய, வீரசுமண வீரசிங்க மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளர் வைத்தியகலாநிதி அனில் ஜாசிங்ஹ உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்த னர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பௌத்தத்துக்கு அதிக முன்னுரிமை புதிய அரசமைப்புக்கு சு.க.பரிந்துரை



**கொழும்பு, மார்ச் 28**

**புதிய அரசமைப்பில் பௌத்தத்துக்கு அதிக முன்னுரிமை வழங்கும் யோசனையை சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ளது.**

புதிய அரசமைப்பு வரைபு தொடர்பான நிபுணர் குழுவிடம் கட்சியின் யோசனைகளை முன்வைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அக்கட்சியின் பிரதித் தலைவர், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு கூறினார்.

மேலும், அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பது குறித்த சரத்துக்களை வலுப்படுத்தும் திட்டத்தையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மற்றும் விலங்கு பாதுகாப்பு குறித்த பரிந்துரைகளையும் முன்வைத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிராமப்புறங்களில் உள்ளவர்கள் மனுக்களைத் தாக்கல் செய்யவும், அவர்கள் தங்கள் குறைகளை முன்வைக்கும் விதமாக உயர் நீதிமன்றத்திடம் இருந்த அதிகாரத்தை மாவட்ட மேல் நீதிமன்றங்களுக்கு வழங்குவது குறித்தும் பரிந்துரைத்ததாக அவர் கூறினார்.

அத்தோடு, மாகாண சபை முறையை வலுப்படுத்துவது குறித்தும் முன்னுரிமை வாக்களிப்பு முறையை இரத்துச் செய்யவும், தேர்தல்களில் 25 வீதம் பெண் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளதாக குறிப்பிட்டார். (எ)

## எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு இல்லை

*கொழும்பு, மார்ச் 28*

நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை இல்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

உலகின் பரபரப்பான கப்பல் போக்குவரத்து இடமான சுயஸ் கால்வாயில் கொள்கலன் கப்பல் ஒன்று தரைதட்டிக் கொண்டது.

இதன் காரணமாக பல கப்பல் சேவைகள் தடைபட்டுள்ள நிலையில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் என சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை இல்லை என இலங்கை பெற்றொலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

## இவ்வருடத்தில் இதுவரை 4,907 பேருக்கு டெங்கு

*கொழும்பு, மார்ச் 28,*

இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4,907 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் அதிகளவானோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை 2,458 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் கடந்த மாதம் 1,070 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## கொரோனா தொற்றிலிருந்து மேலும் 243 பேர் மீண்டனர்!

*கொழும்பு, மார்ச் 28*

நாட்டில் நேற்றுச் சனிக்கிழமை மேலும் 243 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்தனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 88 ஆயிரத்து 388 ஆக உயர்வடைந்தது.

இதேவேளை, இலங்கையில் 91 ஆயிரத்து 561 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அதில் 2,615 பேர் வைத்திய சாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 270 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.

இலங்கையில், கொரோனா தொற்றுக்குள்ளான 550 இற்கும் மேற்பட்டோர் பேர் இதுவரை உயிரிழந்தனர். (எ)

## கொவிஷீல்ட் தடுப்பூசித் திட்டம் இலங்கையில் தோல்வி நிலையில்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

*கொழும்பு, மார்ச் 28*

கொவிஷீல்ட் தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்வதை இந்திய அரசு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ள பின்னணியில், இலங்கையில் தற்போது செலுத்தப்பட்டு வரும் தடுப்பூசி திட்டம் தோல்வியடையும் நிலை குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

முதலாவது கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தப்பட்டு, இரண்டாம் தடுப்பூசி உரிய முறையில் செலுத்தப்பட முடியாவிட்டால், தடுப்பூசி செலுத்தும் பணிகள் தோல்வியடையும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக்குழு உறுப்பினரான வைத்தியர் பிரசாத் கொலம்பகே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்னும், முதலாவது தடுப்பூசி செலுத்தி முடிக்கப்படவில்லை.

இந்த நிலையில், இரண்டாம் தடுப்பூசித் தொகையை பெற்றுக்கொள்வது தொடர்பில், சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து உடன்பாட்டை பெற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போது, தடுப்பூசி ஏற்றுமதியை இந்தியா இடைநிறுத்தியுள்ளது.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில், இராஜதந்திர ரீதியில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்.

முதலாவது கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தப்பட்டு, குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் இரண்டாவது தடுப்பூசியை செலுத்தவேண்டும்.

இல்லாவிட்டால், நாட்டின் நிதியை செலவு செய்து மேற்கொள்ளும் நடவடிக்கை முழுமையாக தோல்வியடையும்-என்றார்.


**ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ**

**அரிசி ஆலை விற்பனைக்கு**

**அமைவிடம் :** புத்தூர் தெற்கு புத்தூரில் பெறுமதி மிக்க அரிசி ஆலை

அளவு - காணி-16 பரப்பு 15.5 குளி அரிசி ஆலை (விசாலமான நெல் உலர வைக்கும் பகுதி, நெல் தானிய சேமிப்புப் பகுதி (02), நெல் ஊற வைக்கும் பெரிய தொட்டிகள் (04), அலுவலக அறை, சமையலறை, ஊழியர் ஓய்வு அறை, கால்நடை வளர்ப்புப் பகுதி (100 வரை), உயிர்வாயு உற்பத்தி செய்யும் பகுதி அடங்கலாக)

**காணி விற்பனைக்கு**

**அமைவிடம் :** மானிப்பாய் வீதி கைதடியில் நன்னீர் வெட்டுக் கிணற்றுடன் கூடிய தென்னைப் பயிர்ச்செய்கைக்கு மிகவும் உகந்த பெறுமதியான காணிகள்

அளவு -
(1) காணி -15 பரப்பு 10.14 குளி
கட்டடம் -737 சதுர அடி
(2) காணி -13 பரப்பு 10.14 குளி





**அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்**
021 224 0303, 021 224 0304
021 225 0065, 021 225 0067
011 266 1866

**கைத்தொலைபேசி இலக்கங்கள்**
077 880 2757 (திரு.சுகன்) 077 786 3040 (திரு.பெனட்)
076 131 1392 (திரு.ஜெரி)
தொலை நகல் 011 266 2820. ஈமெயில்-recovery@hnb.lk
**கேள்விக் கோரிக்கைகளை கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும்.**
**Head of Recoveries, Hatton National Bank PLC,**
**Recoveries Department,**
**Level 18, HNB Towers, No.479, T.B Jayah Mawatha,**
**Colombo 10.**








இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX



11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் - சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : HELLO கோடம்பாக்கம்
7.00 மணி : SPOT LIGHT - வேலன் சுவாமி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம்
10.00 மணி:பதிவு




**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே
(நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org